Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

உ

வேலுமயிலுந் துணை.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று வெளிவரும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

| வயது 1 | 1920ஸ்ரீ ஆகஸ்டுமீ<br>ரௌத்திரிஸ்ரீ ஆடிமீ | மாதம் 12 |
| --- | --- | --- |

## கடவுள் வணக்கம்.

அண்டமுடி தன்னிலோ பகிரண்ட மதனிலோ
அலரிமண் டலநடுவிலோ
அனனடுவி லோவமிர்த மதிநடுவி லோவன்பர்
அகமுருகி மலர்க டுவித்
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத்
திகந்தத்தி லோவெ ளியிலோ
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த
சித்தாந்த நிலை தன்னிலோ
கண்டபல பொருளிலோ காணாத நிலையெனக்
கண்டரு ளியம தனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்னிலோ
கருவிகர ணங்க ளோய்ந்தத்
தொண்டர்களி டத்திலோ நீவீற்றி ருப்பது
தொழும்பனேற் குளவு புகலாய்
சுத்தநிற் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுக வாரியே.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# நாடார்குல மித்திரன்.

## ரௌத்திரிஞு ஆடிமீ

### மித்திரன் வேலையும் பற்பலர் யோசனையும்.

நமது நாடார்குலமித்திரன் பிறந்து இம்மாதத்துடன் பன்னிரண்டு மாதங்கள் சென்று, ஓராண்டு நிறைவானது. இப்பன்னிரண்டு மாதங்களிலும் பற்பல கிராமங்கள், நகரங்களியாவுமுள்ள நம்நேயர்கள் முன்சென்று, பற்பல வர்த்தமானங்களையும் விரித்துரைத்திருக்கின்றான். அநேக கிராமங்களிலுள்ள நாடார் சமூகத்தவருக்குள், ஒரு நவீன சக்தியை யுண்டுபண்ணி, அநேக சங்கங்களையும் வித்தியாசாலைகளையும் உற்பத்தி செய்திருக்கின்றான். பற்பல காரணங்களால் நம்முடைய சமூகவாழ்வு, இவ்வளவுதானோவென்று, வருத்தமுற்று அயர்ந்திருக்கும் அபிமானிகளையும் தட்டியெழுப்பி நாம் நமது கடமையை இன்னும் சரியாய்ச் செய்யவில்லையென்று, உணர்ச்சியை யுண்டுபண்ணி யிருக்கின்றான். சமூகவேலை முடிந்து விட்டதென்று அயர்ந்து நித்திரைசெய்த வுத்தமர்களையெல்லாம் புதிய சகாப்தம் பிறந்துவிட்டது, சுதந்தரம் என்னும் ஞானசூரியன் உதயமாகுமுன்னம் உயர்ந்த காங்களை நீட்டிக்கொண்டு வருகின்றான். எல்லோரும் எழுந்திருங்கள் எழுந்திருங்கள். என்று தன் முழுப் பலத்தையுங்கொண்டு உரத்த குரலினல் கூவி எல்லோரையும் ஏககாலத்தி லெழுப்பிவிட்டிருக்கின்றான். இவைபோ லின்னும் பலவேலை செய்து நமது சமூகசேவையி லீடுபட்டிருக்கின்றான். என்றாலும், நம் நாடார் சமூகத்திலுள்ள குறைகளத்தனையும் நிவர்த்தியாகி சகல காரியங்களும், சம்பூரணமாய் விட்டதென்று சந்தோஷ மடைவதற்கில்லை. இன்னும்பல வருஷங்கள் இடைவிடாமல் வேலைசெய்தாலன்றி சமூக சீர்திருத்தம் சம்பூரணமாகாதென்றே முன்னைவிட இன்னும் பலமான முயற்சிகள் செய்யவேண்டுமென்பதே முக்கிய நோக்கமாயிருக்கின்றான்.



பலகஷ்டங்கள்:—நாமுழுமனதுடன் வேலைசெய்வதற் கிடையில் பல கஷ்டங்கள்வந்து நேர்கின்றன. அதாவது, நம்முடைய சொந்த வியாபார சம்பத்தத்துடன் இப்பத்திரிகையும் சரியாய் நடைபெறுவதற்குறிய சகல யேற்பாடுகளையும் செய்து கொள்வதும் பலவிஷயங்களைய மொன்றுசேர்த்து சென்னைக்கனுப்பி அச்சாகி, இரயில்வே நெருக்கடி ஏனையிக்காலம், சமயம்பார்த்து இரயிலேற்றி யிங்குவந்து, பின்வெளியிடுவதில் நாள் சுணக்க மேற்படுவதும், விஷயங்கள் சரியான காலங்களில் வெளியிட முடியாததுமான இக்கஷ்டங்களெல்லாம் நிவர்த்தியாகாமல் எப்படி நம் உத்தேசம் நிறைவேறி விட்டதாகக் கூறமுடியும் நம்முடைய ஜனசமூகம் இனிமேல் எந்தவிதமான ஆபத்துக்கும் ஆளாகாமல் சமத்துவமாய் வாழவேண்டுமானல் நம்மில் ஆண் பெண் அனைவரும் படித்து உல்சஞான மறியவேண்டும். இவ்வுபாயம் பக்குவமாஷத்திற் குள்ளாவதற் கூடிவிட வேண்டுமானல் நம் மித்திரன் இப்பொழுதே வாரப்பத்திரிகையாகி கிராமங்களில் வசிக்கும் நாடார்கள் ஒவ்வொருவர் கையிலும் நின்றிலங்கவேண்டும். அதற்கு முதலாவது பிரபுக்களுடைய பொருட்சகாயம் வேண்டும். சொந்த அச்சாபீஸ் வேண்டும். அநேக சந்தாதாரர்கள் வேண்டும். இம்மூன்று முண்டானல் வேண்டிய காரியங்கள் வெகு ஊக்கமாய்ச் செய்து முடிக்கலாம்.

பற்பல யோசனைகள்:—இது காலும் நமக்கு முக்கியமான அபிமானிகள் பலரும் நேர்முகமாகவும் கடிதமூலமாகவும் பலயோசனைகள் சொல்லியும், சொல்லிக்கொண்டு மிருக்கிறார்கள். அதாவது மித்திரன் பக்கத்தை அதிகப்படுத்தி நல்லகடிதத்தில் அச்சிடவேண்டுமென்றும், வாரப் பத்திரிகையாக்கி விஷயத்தை அதிகப்படுத்த வேண்டுமென்றும், மாதமும் வாரமும் காலத்திற்கு ஒத்ததல்ல, சகலரும் நித்திய வர்த்தமானமறியும் பக்குவத்திற்கு வந்துவிட்டார்கள். ஆகலால் தினசரியாக்க வேண்டுமென்றும், பங்கொன்றுக்கு பத்துரூபாய் வீதம் ஆரிம்பங்கு சேர்த்தொரு மூலதனம் வைத்து, நாடாரல்லாத மற்றொரு பொதுப்பெயர் கொடுத்து, பொதுவான பத்திரிகையாக தினசரி நடத்தலாமென்றும், மேலும் விஷயங்கள் ராஜீய விஷயமாயிருக்க வேண்டுமென்றும் சிலர் ராஜீயத்தில் சற்றேனும் நுழையக் கூடாதென்றும், சிலர் திராவிடக்கக்ஷியா யிருக்கவேண்டுமென்றும்,

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

சிலர் சுநிலைமையா யிருக்கவேணுமென்றும், சிலர் ஆசாசிர்திருத்தமாயிருக்கவேணுமென்றும், வேதாந்த விஷயமாய் யிருக்கவேணுமென்றும், கூறுகின்றார்கள். இவர்கள் கூறுவதெல்லாம் நல்லுபதேசமாய்க் கொண்டாலும், எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. என்னு முதுமொழிப்படியே. காலத்தின் போக்கை அனுசரித்து நடப்பதே சாலச்சிறந்ததென்ற நோக்கத்தைக் கொண்டே இதுநாளும் நடந்துவந்தும் இன்னமும் நடக்கவு மிருக்கின்றோம். நமக்காதரவாக அரியபெரிய யோசனைகள் சொல்லிவந்த அபிமானிகளின் நன்றி யொருக்காலு மாக்கமாட்டோம். பிரபுக்கள் நன்கொடைதந்து ஆயிரக்கணக்கான ரூபாய்களாவது அபிமானிகளின் முயற்சியின்மேல் ஆயிரக்கணக்கான சந்தாதார்களாவது இதுவரையும் சேரவில்லை. சேர்ந்த சந்தாதார்கள் எல்லோருமாவது மித்திரன் அபிவிர்த்தியில் தீவிரமான சிரத்தை யெடுப்பார்களுமில்லை. இந்நிலைமையில் நாம் அவசரப்பட்டு மித்திரனை தினசரியாகவாவது வாரமாகவாவது மாற்றுவதற் கிஷ்டமில்லை. அவசரப்பட்டால் காரியம் ஒன்றும் ஸ்திரமாய் நடைபெறாது. பொருட்சகாயமும் சந்தாப்பெருக்கு மில்லாத பத்திரிகைகளனந்தம் விழுந்து போனதை யாமறிந்திருக்கின்றோம்.

ஆரம்பத்தில் 1100-நபர்களுக்கு பத்திரிகையனுப்பி ஆறுவது மாதம் அத்தனைபேருக்கும் வி. பி. அனுப்பினோம். 400-நபர்கள் வி-பி-யைத் திருப்பிவிட்டார்கள். ஆரம்பத்திலேயே திருப்பிவிட்டிருந்தாலும் நமக்கு ஒரு புள்ளியின்பேரில் இரண்டேகாலணா நஷ்டத்துடன் நிற்கும், அஃதன்றி, 14-அணா 6 பை. நஷ்டம் ஏற்படும்படியாயிற்று. இதைப்பற்றி நாம் யாரையுங் குறைகூற முடியவில்லை. எப்படியும் நமக்கு. வி. பி. திருப்பி வந்த வகையில் 362-ரூபாய் 8-அணா நஷ்டம் ஏற்பட்டதைச் சொல்லாமல்விடப் பிரியமுமில்லை. இதனால் நமக்குக் கொஞ்சம் மனதூக்கம் குறைந்தாலும் பின்னால் கிராமங்களிலிருந்து நாளடைவில் 500-சந்தாதார்கள் சேர்ந்துவிட்டதால் ஆறுதலுக் கிடமுண்டாயிற்று. சிவகாசிக்கு நாம் முதலாவது சென்றிருக்கும்போது, பத்திரிகை சரியாய் நடக்குமாவென்று சிலர் சந்தேகப்பட்டார்கள். ஆகையாலவர்களிடம் சந்தாக்கேட்காமல் வந்து பத்து மாதமும் பத்திரிகை யனுப்பிவிட்டுப் பின் 57-நபர்களுக்கு வி. பி. அனுப்ப 22-நபர்கள் வி. பி. திருப்பி யனுப்பிவிட்டார்கள். ஆனாலும் அவர்களுக்குத் திரும்பவும் பத்திரிகை யனுப்பித்தான் வருகிறோம்.—



தற்சமயம் மொத்தம் 1400 சந்தாக்களிருக்கின்றன. இந்நிலைமையில் மாத மிருமுறையாக்கினால் 1000 - ஆகிவிடும். வாரமாக்கினாலோ 500-க்கு வந்துவிடும். தினசரியாக்கி விட்டால் 100 - புள்ளிகள் சேருமென்றே நம்புகின்றோம். இதற்குமேல் கொஞ்சமாவது கூடுமென்று நம்புவதற்கில்லை. கல்விஞானம் அதிகமாய்ப் பரவியுள்ள விடங்களிலும், ஜனத்தொகை அதிகமான யிடங்களிலுமே, நமது பத்திரிகை அதிகம் பரவாமலிருக்கின்றது. திருநெல்வேலிஜில்லாவில் 310-ம் இராமநாதபுரம் ஜில்லாவில் 400-ம் மதுரைஜில்லாவில் 210-ம் கோயம்புத்தூர் ஜில்லாவில் 25-ம் தஞ்சை திருச்சிஜில்லாவில் 52-ம் இதர ஜில்லாக்களில் 150-ம் பர்மா மலாக்கா பினாங்கு முதலிய விடங்களில் 67-ம் சிலோனில் 185-மாகப் பரவியிருக்கின்றது. நமது ஜனத்தொகை பெருக்குற்ற திருநெல்வேலி ஜில்லாவில் 310-நபர்களேயிருப்பதானது மிக்க ஆச்சரியமன்றோ? ஷை ஜில்லாவில்தான் முற்காலத்திலும் நம்முடைய ஜனங்கள் அதிகமாய் வசித்து வந்திருக்கின்றார்கள். அங்கிருந்துதான் அநேகர் வெளியேறிப் பலவிடங்களிலுங் குடியேறி யிருக்கின்றார்கள். நம்முடைய ராஜதானி இழக்கப்பட்டவுடனே அந்நியர் செய்யுந் துன்பத்திற் காற்றாது அனேகர் கிறிஸ்து மார்க்கத்தை யனுசரித்து விட்டதாலும், ஒருவர்க்கொருவர் தெக்ஷிணம் உத்தரம் என்றபேதம் பாராட்டி வந்தமையாலும் மேலும் கிராமாந்தரங்களிலே, அதிகமான ஜனங்கள் வசித்து வருவதாலும், அச்சில்லாவில் ஜாதீயவுணர்ச்சி வேரூன்றி யின்னும் பலப்படவில்லையென்று நினைக்கிறோம். ஒருமுறைநாம் அச்சில்லா முழுமையும் சுற்றியாவது மித்திரனைப் பரவவிடுவதா யுத்தேசித்து மிருக்கின்றோம்.

பிரபுக்கள் பொருட்சகாயத்தின்மீது ஒரு ஸ்திரமான பண்டாவது இரண்டாயிரம் பேர்களாவது ஸ்திரமான சந்தாதார்களாக உண்டாகும் வரையிலும், மித்திரனை மாதமொருமுறையாகவே நடத்தி வருவதாய்த் தீர்மானித்திருக்கின்றோம். 10-ரூபாய் விதம் பங்கு சேர்த்து பண்டுவைத்து நடத்துவதற்கு நம்மவருக்குள் கூட்டுறவு சங்கங்கள் யேர்ப்பட்டு பக்குவத்திற்கு வருமுன் அம்முறையும் சாத்தியப்படாது. வர்த்தகப் பெருக்கு நமக்குள்ளிருந்தும் கொழும்பில் ம-௱-௱-ஸ்ரீ, சி. பொ. பொன்னையா நாடாரவர்கள் ஒரு வர்த்தகக் கூட்டு விஷயமாய் அனுப்பியிருந்த பத்திரிகைக்கு பதில் இரண்டொருவரே எழுதியிருந்தார்களாம். அப்படியிருக்க பத்திரிகைக் கூட்டுக் கெ



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

கனம் பண்ணிக்கொண்டுப் போகின்றார்கள். திறக ராஜீய விஷயமாய் நாம் பத்திரிகைகளில் எழுதவேண்டுமென்று பலபேர்கள் வற்புறுத்துவதினாலே வாரப்பத்திரிகை யாவதற்கு முன்னே நாம் வெளியில் முழுமனதுடன் இறங்கி வேலைசெய்வதற்கு மனந்துணியவில்லை. நம்முடைய ஜனங்களுக்கு ராஜீய ஞானத்தை கற்பிப்பது அவசியமாகுதும், சமூகசீர்திருத்த விஷயமான விபரங்கள் அதிகமாய் வந்து கொண்டிருக்கின்றது. நமது பத்திரிகை நிலைபெறுவதற்கு சந்தாதாரகளே ஆணிக்கல்லாய் இருப்பதினாலே, அவர்களுடைய மனதை திருப்தி செய்வதிலும், நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டிய திருக்கின்றது. மேலும் தற்சமயம் ராஜீயவிஷயத்தில் கொஞ்சம் மிதமாய் வெளிவந்து வரவேண்டியதாயு மிருக்கின்றது.

சரியானவழி:—இனிமேல் மாதாமாதம் 15-தேதிக்குள்ளாக நம் மித்திரன் சரியாய் வெளியாகும்படி சொந்தத்தில் ஒரு அச்சாபீஸ் வைத்து நடத்துவதே சரியான வழியென்கக் கண்டு அதன்படி சகல வேலைகளும் நடக்கும் ஏற்பாடு செய்திருக்கின்றோம்:—கடவுளருளால் 40-பக்கமாக அதிகப்படுத்தி இரண்டாவதாண்டில் விஷயப் பெருக்கா யும் வெளியிட லாமென்று நினைக்கிறோம் மாதம் ல், மித்திரமோபாளிகள் யாவரும் அதிக்கவாகு—படும் வெகு சிரத்தையுடன் ஆதரித்துவர வேண்டியது. மித்திரன் மாதமொருமுறை வெளிவருவதினாலே தினசரிப் பத்திரிகைகளைப் பார்க்கவர்களுக்கு இதைப்பார்க்க அவ்வளவு இன்பமா யிராதென்று சிலர் நினைக்கின்றார்கள். அது உண்மைதான் பாலுக்கேனும் பருகும்பாலும் பாயசமும் பஞ்சாமிர்தமும் பருகின வாய்க்குப் பருப்புசாம் வெறுப்பாகத் தானிருக்கும் வாய்க்குருசி பார்ப்பதோடு நில்லாமல் தேகாரோக்கியமும் மனோற்சாகமும் கவனிக்கவேண்டிய தவசியம். அவல்விட்டுப் பின்னேசனைத் தின்ப ஆர்த்தி முசுக்கிலும் இனவீட்டுப் பின்னேசனை ஒருவேனே கொண்டு வது சிலர்க்கியமாகுமோ போல் பல பத்திரிகைகளைத் தினசரி படித்தும் நாட்டுப் பத்திரிகைகளை ஒருமுறை பார்ப்பதில் பிரயோசனமிராமற் போகாது. ஆகையால் குலாபிமான முன்னவர்கள் தினசரி பத்திரிகை படித்தாலும், புத்திரன் வரவை எதிர்பார்ப்பதுபோல் நம் மித்திரன் வரவை வழிமேல் விழிவைத்து வெகு ஆவலாய் எதிர்பார்த் திருப்பார்களென்றே நம்புகின்றோம்.

பலவித நன்மைகள்:—தினசரியும் வாரத்திரியும் தபால்போய்ச் சேர முடியாத குக்கிராம வாசிகளுக்கும் தினசரி பத்திரிகைகளுக்கு



அதிகத் தொகைகொடுத்து வாங்கிப்படிக்க முடியாதவர்களுக்கும் நம்முடைய பத்திரிகை போசகவும் படிக்கவும் பேறுவாயிருக்கும். நாடார்கள் இது கிராமங்களில்தான் அதிகமாய் வசிக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் நம் மித்திரன் இன்றியமையாப்பெரும் பொக்கிஷமாய் விளங்கிப் பலவித நன்மைகளுண்டாக்கக்கூடும். நாடார் சமூகம் மேலோங்க வேண்டுமானால் கிராமங்களிலே விசேஷவுணர்ச்சி புண்டாக வேண்டும். ஆதலால் மித்திரன் நகரங்களில் வசிக்கும் நேயர்களைப் பார்க்கிலும் கிராமங்களில் வசிக்கும் நம்மவருக்கே மிக்க உபயோகமாக விருக்கும். நம்முடைய நோக்கமும் உலகத்தோடு விரிவாகத்தெரியாத ஜனங்கள் ஒருவாறு சீர்திருத்தம் பெற்றுவிட்டால், அச்சமூகமனைத்தும் பிரயாசையின்றி தானே உயர்ந்துவிடு மென்பதால் மித்திரனை கிராமவாசிகளுக்கே முக்கிய பிரயோஜன மாகும்படி முன்னிலும் அதிகமான முயற்சியெடுத்துக் கொள்வதா யுத்தேசித்திருக்கின்றோம். கிராமத்தில் வசிக்கின்றவர்களைப் பார்க்கிலும் சகல விதத்திலும் பிற்போக் குடையவர்களாய் பெரிய டவுன்களிலும் அநேகரிருக்கின்றார்கள் ஏனைப்பகை நகரவாசிகள் மாவாமல் மித்திரனை கிராமத்தாருக் குள்ளதென்று ஒதுக்கிவிடா திருப்பார்களாக.

குறைகள் வெகு மிருக்கின்றன. ஒருகிராமத்திலுள்ள மனிலைக் கடைக்காரப் பிரபு ஒருவர் மித்திரனைப் படிக்கவேண்டுமென்று விரும்பி சென்னை க. க. சங்கரலிங்க நாடார் அவர்களுக்கு வெழுதிய கடிதத்தில் மேல்விலாசம் எழுதுமிடத்தில் விஷயத்தை தாறுமாறுவெழுதி போஸ்டேஜ் சார்ஜ் 1-அணு வசூலாகும்படி செய்துவிட்டார். இந்த மதுரை நாடார்களின் பூர்வீகஸ்தலம். பெரியடவுன். இப்பெரியபட்டணத்திலுள்ள ஒரு பிரபு, எனக்குப் பத்திரிகைபடிக்க நேரமில்லை. உம்முடைய பத்திரிகையை அனுப்ப வேண்டாமென்று, மித்திரன் அச்சுக்குத்தலமும், சென்னை நவரத்னம் பிரசுக்கு ஒரு கார்டெழுதி யனுப்பி யிருக்கிறார். இவ்விருவர்களின் வெள்ளைவிதத்தியாசம் ஆகவே, குறைகள் எங்கு மிருக்கின்றன. தினசரி பத்திரிகைபடித்துத் தெரிந்த அறிவாளிகள் சிலர்தானிருக்கலாம். ஆகையாலிருதரத்தாரும் ஒருமனப்பட்டு நம் மித்திரனை யாதரிப்பதே சிலாக்கியமா யிருக்குமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. நம்மில் படித்த ஆடவர்கள் நூற்றுக்கு ஐந்துபேர்களைக் கணக்கிருக்கும்போது, தினசரிப் பத்திரிகைகள் சிலபேர் படிப்பதைப்பார்த்து மகிழ்ந்துவிட ஞாயமில்லை. படித்தவர்களிலும் எழுத்துகூட மிசாமல் படிக்கிறவர்களும் படித்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

தனை மனதில் இருத்திக் கொள்கிறவர்களும் மிகச் சொற்பமாகவே யிருக்கலாம். இளிப்பிள்ளைபோல் படிக்கிறவர்க ளனேகரிருக்கலாம். ஒருசமயம் நானொரு கிராமத்திற்குப் போயிருக்கும்போது பொழுது போக்குக்காக பழைய தினசரி பத்திரிகைகளை யெடுத்துப் படித்துக் கொண்டிருக்கையில், அக்கிராமத்திலுள்ள முக்கியஸ்தர் படிப்பாளிகளைக்காளி, எனப் பெயர்பெற்ற வாலிபர் ஒருவர் பெம்பக்கத்தில் வந்து, ஆ! அப்பா! இதென்ன எவ்வளவுநீள அகலமுள்ள தாளில் எவ்வளவு பெழுத்து எழுதியிருக்கிறது. இவ்வளவையும் எப்படிப் படித்துத் தொலைக்கிறது. என்று பேராச்சரியப்பட்டார். இதை நீர் கொஞ்சம் படித்துப்பாருமென்று கொடுத்தேன். பாலர் வகுப்புப் பிள்ளைகள் எழுத்துக்கூட்டி வாசிப்பதுபோல் படித்தார். படித்தவார்த்தைகளின் சாராம்சமும் தெரிந்துகொள்ள அவரால் சாத்தியமில்லை யென்றால் பெண்களின் கல்வி நாகரீகத்தைக் கவனித்தால் பரமதுக்கமா யிருக்கிறது. இவ்வித நாடார்குலப் பெண்களைத்தவிர இந்த நாடார் குலப் பெண்களில் எழுதப் படிக்கத்தெரிந்து சாஸ்திர ஞானமுணர்ந்து சமூகவிர்த்தியை நாடும் மாதுசிரோன்மணிக ளொருவராவதுண்டா? ஆடவர்களைப்போல் பெண்களுக்கும் இஜமானம் ஜஜமானம் தேசாபிமானம் பாஷாபிமானம் அவசியமல்லவா? இவ்வபிமானங்களில்லாத பெண்களுடன் சம்பந்தம்வைத்துக் கொண்டிருக்கும் எந்த ஆண்மக்களுடைய வாழ்வும் நல்வாழ்வாகுமா? அச்சமூகந்தான் அபிவிர்த்தியாகுமா? நாகரீகம்பெற்ற சமூகமென மதிக்கவியலுமா? இச்சம்பவங்களையெல்லாம் எடுத்துச்சொல்ல அச்சமும் நாணமு முண்டாகின்றதென்றாலும் உண்மையை யெடுத்துக் கூறுவது நம்கடமை யென்றே முன்வந்து கூறலானேன்?

ஜனங்களுக்குக் கல்வியபிவிர்த்தி யாகவேண்டிய வழிகளில் முதல் வழி பத்திரிகை படித்தலென்று கல்வி கேள்வியும் அனுபோக சாலியுமான நாடார் மகாஜனசங்கம் மானேஜர் ஸ்ரீமான் P. பழனிவேல் நாடார் பி. ஏ. அவர்கள் சென்றமாதப் பத்திரிகையில் வெகு விஸ்தாரமா யெழுதியிருக்கின்றார்கள். ஆகலால் குலாபிமானிகளொவ்வொருவரும் நம் மித்திரன் இரண்டாவது வயது வருவதற்குள் புதிய சந்தாதார்களைச்சேர்த்து அனுப்பிவைக்கும்படி கோருகின்றேம்.

---

பத்திராதிபர்.



# மங்கையர் சங்கதி.

நாடார்குலப் பெரியோர்களே முன்னெடுப்பிலே மாதர்கள் விஷயத்தை யெடுத்துக்கொண்டு ஆடவர்களைக் கூவியழைப்பதேனென்று கருதலாம். ஆனால் பெண்கள் நலத்திற்கு உங்களுதவி யவசியமென்றே அதன் முறையை உங்களிடம் சொல்வதற்காக உங்களைக் கூவியழைக்கும்படியானது. உலகத்திலே தற்சமயம் ஒவ்வொரு ஜனசமூகமும் சுதந்தரத்துடன் சுகமாய் வாழவேணுமென்று துடிதுடித்துக்கொண்டு நிற்கின்றது. சிலகாலமாக இந்தியாவின் எழுச்சியைப்பார்த்தால் மதிக்கமுடியாத முற்போக்குடையதாய்த் தெரிகின்றது. நம் முடைய தேசம் முற்போக்கடைய வேணுமானால் பெண்களுடைய நிலைமை உயரவேணுமென்று பெண்களுக்கே புதியவுணர்ச்சி யுண்டாகி பற்பல வேலைகள்செய்து வருகின்றார்கள். ஒவ்வொரு ஆடவர்கள் சபையிலும் பெண்கள் காணமின்றிப் புகுந்து ஆடவர்களும் திகைக்கும்படி அரியபெரிய உபன்யாசங்கள் செய்கின்றார்கள். இந்து திலகமாகிய சகோதரி சரோஜினி தேவியார் நேரே இங்கிலாந்து தேசம் போய் இந்தியாவின் குறைகளை நிறைவேற்றமுயன்று கொண்டிருக்கிறார்கள். கோஷாஸ்திரிகளுங்கூட திரைமறைவிலிருப்பது பெருங்கேடென்று, பகிரங்கமாய் நின்று பேசமுன்வந்து விட்டார்கள். இவ்வளவு கோலாகலமா யிவ்வுலக காட்சியை நடப்பதைக் கண்டாவது நாடார் சமூகம் சரியானபடி கண்விழித்துப் பாராமல் கொட்டாவிவிட்டுக் கொண்டிருப்பது மகாதுக்கமா யிருக்கின்றது.

எந்தக் காலத்திலும் தங்கலத்திற்காக பிறர் சகாயத்தை எதிர்பார்க்காமல் சகல யோக்கியதைகளையும் தேடிக்கொள்ளக்கூடிய தன்மைமிக்கயுள்ள ஜாதியாராயிருந்து வந்தும் பிறர்மேலேறிச் செல்வதைப் பார்த்து பராமுகமாயிருப்பது காலவித்தியாசமென்றே கருதவேண்டியதிருக்கிறது. இம்மாதிரி காலத்தை அபத்தமாக்கப் படாதென்றே நம் நாடார்குல மித்திரன் ஆசிரியர் ஸ்ரீ ஆ. முத்து நாடாரவர்கள் நாடார் சமூகத்துக்கத்தினின்று தட்டியெழுப்பி வருகின்றார். பாலவனத்தில் பிரயாணஞ்செய்த களைப்புற்ற ஒருவனுக்கு ஆலவிருக்ஷமும் தடாகமு மகப்பட்டதுபோல் கல்விசமையத்தில் நாடார்குல மித்திரனும் க்ஷத்திரிய மித்திரனும் தோன்றியிருப்பதைக்கண்டு நாடார் சமூகமனைத்தும் நன்றிசெலுத்த வேண்டாமா, இவ்விரண்டு மித்திரனை

யும் வாரப்பதிப்பாக்கினால் நாடார் சமூகம் நன்மையடையும். இ... பதினொருமாதமாக எம்மருமைக் குமாரனுக்கு வந்துகொண்டிருக்கு... நம்மித்திரனை ஒருமுறையாவது தவராமல் பார்த்து வந்திருக்கிறேன் ஓரிடத்திலாவது நமது பெண்கள் சீர்திருத்த விஷயமாக எழுதி யிருப்பதைப்பார்க்கவேயில்லை. ஆகவே ஆடவர்கள் சீர்திருத்தமடைய வேண்டிய பாகமநந்த மிருக்குமென்பதாக மதித்தேன். ஆடவர்கள் விஷயத்தை முடித்துக்கொண்டு பெண்களைக் கவனிக்கலாமென்பது அசம்பாவிதம். அது கடலலை யொழிந்தபின் முழுகலாமென்பதுபோ லாம். அப்படி ஆடவர் கூட்டமட்டும் நாகரீகம் பெற்றுவிட்டால் மனிதருக்கு ஒருகண் ஊனமாயிருப்பதுபோலாம். குடும்பமெனும் சகடை ஸ்திரி புருஷர் என்னு மிரண்டெழுத்துகளும் ஒத்திழுத்தால் தான் சமரச வாழ்வாகும். ஆகையால் பெண்களாகிய எங்கள் கூட்டத் தைக் கவனிக்காவிடில் ஆண்களாகிய உங்கள் கூட்டம் முன்னேரமுடி யாதென்று ஒரு சாபமாய்ச் சாற்றுகின்றேன். வீட்டுக் காரியங்களைக் கவனிக்கவேண்டிய பொருப்பு பெண்களுக்கு எப்படி அதிகமாயிருக் கின்றதோ அதே வண்ணம் நாட்டுக்காரியங்களிலும் பொருப்பு அதிக மாகவே யிருக்கின்றது. ஆதலால் தேசாசார சீர்திருத்த விஷயங்களி லும் கல்வி, அறிவு, கேள்விகள் விர்த்தியாகவேண்டிய வழிகளிலும் பெண்கள் கூட்டத்தைப் புகட்டிவிட்டுப் போதனைகள்செய்து வரும் படி கேட்டுக் கொள்கின்றேன். இன்னும் நாடார்சமூகம் முன்னேர வேண்டிய வழிகளையும் முன்னேற்றத்திற்கு தடைகல்லாயிருப்பது ஆடவர்கள் பெண்களுக்குச் செய்யும் பெரும்பிள்ளைக ளென்பதை யும், அப் பிள்ளைகளொழியச் சிலமுறைகளையும் மற்றுஞ்சில விஷயங் களையும் மூன்று வியாசங்களில் முடித்துவிட்டு அப்பால் எம்மருமைச் சகோதரர்களுக்குச் சொல்லவேண்டிய விஷயங்களை விரிவாயெழுதி வருவேன். இதுமுதல் மித்திரனைப் படிக்கும் ஆடவர்கள் பெண்களும் படித்துவரும்படி யேற்பாடு செய்யவேண்டியது. கல்லாத பெண் களுக்கு சொல்லாணுணர் ...ளிக்கும்படி எல்லாப் பெரியோர்களையும் தாழ்மையுடன் கேட்டுக் காள்கிறேன்.

நாடார்குல சகோதரி.

குறிப்பு:—சந்தாநேயர்கள் பலரும் தவராமலிவ்வியாசத்தை ஒரு முறைக் கிருமுறை நன்றாய்ப்படித்து அதன் சாரத்தை கிரகித்து நஞ்சோகதரிகளுடைய அபிவிர்த்தியை கவனிக்க வேண்டுமென்பதை



கண்டிப்பாய் கூறுகின்றோம். அக்காலத்தில் ஔவையாரும் தற்காலத் தில் அன்னிபெஸண்டு அம்மையாரும் சமூகவாழ்வி லீடுபட்டு அனேக நன்மைசெய் திருக்கின்றார்கள். பத்து மனிதர்கள் சமூகவூழி யர்களாவதைப் பார்க்கிலும் ஒரு பெண் அவ்வூழியத்தி லிரங்குவதில் பலன் வெகு சீக்கிரம் கிடைக்குமென்பதை நாம் சொல்லவேண்டிய தில்லை. ஆதலால் நாடார்குலப் பெண்மணிகள் அதிகமாய்ச் சமூக ஊழியம் புரியமுன் வரவேண்டுமென்பது நம்முடைய விருப்பம்.

பத்திராதிபர்.

# கடிதங்கள்.

## பர்மா கமுதிநாடார் அசோஸியேஷன் இரங்கூன்.

இந்நாமம்பூண்ட அசோஸியேஷனானது, பர்மாவிலுள்ள கமுதி நாடார்களின் பொது நன்மையைக்கருதி சென்ன ஜனவரிமாதம் முதல் தேதியன்று ஸ்தாபிக்கப்பட்டு ஒழுங்காய் நடைபெற்று வருகிறது. இவ்வசோஸியேஷனுக்கு செக்ரட்டெரியாக கனம் ம. கா. கார்மேக நாடாரவர்களை நியமிக்கப் பட்டிருக்கிறது.

இதன் சந்தாதார்கள் இரங்கூன், சிரியம், தவ்வாய், யெர்க்கி முதலான யிடங்களில் இருக்கிறார்கள். இவ்வசோஸியேஷன் பேரால் ...மாதந்தோறும் வசூலிக்கப்படும் ரூபாயில், வருடந்தோறும் கமுதியில் நடைபெற்றுவரும் தலைப் பண்டிகையன்று ஸ்ரீ பாலசுப்ரமண்யக் ...வுளின் திருப்பணி மண்டபப் படிக்கு ரூபாய் 50 செலவுசெய்கிற ...தென்றும், மீதியான ரூபாயை ஒரு பண்டாகச்சேர்த்து, போதுமான ...தொகை சேர்ந்ததும் பொதுநன்மைக் கவசியமான விஷயங்களில் (...முதியில்) செலவு செய்கிறதென்றும் இவ்வசோஸியேஷனின் முக் ...நோக்கம்.

இதன் அபிவிர்த்தியைக்கருதி ஸ்தாபக தினத்தன்று கனம் கா. ...சைய நாடாரவர்கள் ரூபாய் 25 நன்கொடை யளித்திருக்கிறார்கள். ...போஷிகள் தங்கள் சந்தாக்களை மாதந்தோறும் குறித்தகாலத்தில் ...மல் செலுத்தி அசோஸியேஷனை அபிவிர்த்திக்குக் கொண்டு ...ம்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

தமது திருப்பணியையே முதல் ஸேவையாகக்கொண்ட இவ் ...ஸோசவியேஷனின் நோக்கங்கள் விக்கினமின்றி நிறைவேற எல்லாம் ...வல்ல ஸ்ரீ பாலசுப்ரமண்யக் கடவுள் கிருபைபாலிப்பாராக.

"பாலபாஸ்கரன்"

குறிப்பு:—திரைகட லோடித்தேடிய திரவியத்தை கடவுளுக்குப் பாதியும் கல்விக்குப் பாதியுமாகக் கொடுத்துதவும்படி அறிவிக்கின் ...றோம். கல்விஞானமின்றி கடவுளை யறியமுடியாது. தானத்திலும் வித்தியாதானம் சிறந்ததெனவுன்னிப்பார்த்து நன்றென்பதை அன்றே செய்யுங்கள்.

பத்திராதிபர்.

---

## பந்தல்குடி நாடார்களின் நிலமை.

பந்தல்குடி இவ்வூர் அருப்புக்கோட்டைக்கு தெர்க்கில் சுமார் 8-மைல் தூலவிலிருக்கிறது இவ்வூரில் நம்மவர்கள் சுமார் 70-வீட்டுக் காரர்கள் வசித்து வருகிறார்கள். முற்காலத்தில் பூராவும் விவசாயிக ளாகவும் நாகரீக மில்லாதவர்களாகவுமிருந்து வந்திருப்பதாக தெரிய வருகிறது. தற்காலத்தி அவ்விதமின்றி சிறிது நாகரீகத்தில் பழகி சிலர் வியாபாரிகளாகவும பலர் விவசாயிகளாகவும் மிருந்து வருகிறார் கள் நிற்க சுயற்கக்ஷியும் ஒற்றுமையென்று கூக்குரல்போடும் நயவஞ் சக பார்ப்பணர்கள் வசிக்கும் அக்ரகாரதெருவிலும் நாடார்கள் நட மாடக் கூடாதென்றும் இன்னும் இதர ஜாதியார்களாலும் பல இடுக் கண்களனுபவித்து வருகிறார்கள். தவிரவும் சுமார் நாலைந்து வரு ஷத்திற்குமுன் ஒற்றுமையோடு மகமை வசூலாகி மகமைக்கடை யென்ற கட்டடம் ஒன்றுகட்ட அஸ்திவாரம் போட்டு உத்தரமட்டம் வரையிலும் சுட்டி கட்டடம் பூர்த்தியாகுமுன் யாதோ தெய்வ வசத் தினால் ஒற்றுமைக்குறைவு யேர்ப்பட்டு மகமை ஒழுங்காக வசூல் செய்யாமலும் கட்டடத்தைக் கட்டி முடிக்காமலும் இருந்து விட் டார்களென்று தெரிய வருகிறது. கட்டடம் கட்டி முடிப்பவரு ...ரொன்று கொட்டாவிவிட்டுக் கொண்டிருக்கிறது முன் வசூலாகிவந்த மகமையில் யிருப்பு ரூபாய் (நூறு) 100 வரையிலும் அம்பலகார் முறைகாரரென்ற பெரிய மனிதர்களிடம் குறைவில்லாம லிருப்பதா ... அருப்புக்கோட்டையிலிருந்து சுமார் (60



வருஷகாலமாக இவ்வூரில் வந்து பலசரக்கு வியாபாரம் செய்துவரும் இரண்டொரு வியாபாரிகளும் இதுகால பரிபந்தம் கவனிக்கவில்லை. நமது நாடார்குல மித்திரன் பிறந்து மாசம் 11-ஆகியும் இவ்வூரில் மித்திரன்யென்ற சத்தமே கேழ்க்கவில்லை.

சென்ற வைகாசிமாதம் முதல் அருப்புக்கோட்டை நகர்வாசியும் இவ்வூர் பிரபல வியாபாரியுமாகிய கனம் ப. க. ஆ. ச. ஆறுமுக நாடா ரவர்களின் நன்முயற்சியாலும் ஷெ யார் நம் நாடார்குல மித்திரனைப் படித்து மகமையினால் உண்டாகும் நற்பயனை நம்மவர்களனுபவிக்க வேண்டுமென்ற யெண்ணத்தாலும் ஒற்றுமையில்லா திருந்தவர்களை யொருங்குபடுத்தி மட்டில்லாச் சீர்த்திவாய்ந்த மகமையை திட்டமாய் வசூல்செய்து மாதம் ஒருமுறையாக 12-மாசத்திற்கும் 12-முறைக் காரர்கள் யேர்ப்படுத்தி அதில் தானும் ஓர் முறைகாரராக நின்று ஒத்துழைத்து வருவதாக தெரிய வருகிறது. கூடிய சீக்கிரம் முன் யிருப்பு ரூபாயையும் வசூல்செய்து, மகமை கட்டடத்தை கட்டி முடிப்பாரேல் இவ்வழியாக செல்லும் வேற்றூர்வசிகளாகிய நம்மவர் களுக்கு தங்க இடவசதியும் இன்னும் அநேக காரியங்களுக் கனுகூல மாக யிருக்கும் இன்னவர் யெடுத்த காரியத்தைதொடுத்து முடித்து இவ்வூரில் ஓர் சங்கம் ஸ்தாபிப்பாராகில் இவ்வூரில் வசிக்கும் நாடார் களுக்கு இவர்பெரிதும் உதவிசெய்தவராகவு மிருப்பார். சுபம்!

ச. சுப்பிரமணிய நாடார்.

---

## ஓர் சம்பாஷணை.

மாந்தரு சிரந்து வோங்கிகோ சூழ்வத்திரா யிருப்பினின்று, கன் னலுஞ் சென்னெலும் செழித்த குன்னூருக்குப் போகவெண்ணித், தெற்குநோக்கி செல்லுஞ் சாலைவழியாகச் சுமார் பதினாலுவயதுள்ள பாலியனொருவன் நடந்துகொண்டிருந்தான். அப்போது, எதிரில், சில புத்தகஞ்சேர்ந்த கட்டொன்று வைத்தொரு மாணாக்கன்வர, புன்சிரிப் புடனிருவருஞ் சந்தித்துச் சென்றவன் வந்தவனைநோக்கி "நண்பா ஆறுமுகம் விடுமுறை நாளா? அல்லது யேதாவது விசேஷமா? ஏன் படிப்பைவிட்டு வருகிறாய்?"

"அன்பா! அஃதொன்றுமில்லை, நீ உன்தாயார் அடுத்த வூரிற் போய் படிக்க எனக்கு இஸ்டமில்லை என்று சொல்லவந்து விட்டா யல்லவா? அதன் பிற்பாடெனக்கு அசௌக்கியம் நேரிட்டது, அத

நிச்ச வெண்தங்கை ஊருக்கு வாவென்றழைப்பிய லெட்டர் பெற்றவுடன் வந்துவிட்டேன்.

அந்தோ! நேசா! நம்மிருவருக்குள் கல்விச்செல்வம் கைகூடாது போனதற்குக் காரணம், நம்மூரில், நாம் படிக்கவோர் பாடசாலை யிராததிலுமல்லவோ?

ஆம். மாதவா! அப்பாடசாலை விஷயத்தைப்பற்றி நம் பெரியோர்கள் இனியாவது கவனிப்பார்களா?

கவனிப்பார்களென்று நம்புகிறேன். ஏனெனில் இச்சமயம் சங்கம் ஒன்றுண்டாக்க வெண்ணங்கொண்டு, ஆனிமீ 1௨ ஒரு சபை கூடியோசிக்கச் சுற்றார்களுக்கு, அழைப்புப் பத்திரிகை யனுப்பியிருக்கின்றார்கள்.

ஓகோ அப்படியா! அச்சங்க மொன்றுண்டாகி, நம்போன்ற சிறுவர்கள், கல்வியென்னும் கனகலோ கத்திற்குப்போக, ஏணிபோலுதவுமானால் மிசன் அருள்புரியாராக நிற்க நாம், தேடாதுகிடைத்த 'நாடார்குல மித்திரன்' இல்லங்கட்டோறும் இருக்கின்றதே?

சுமார் நான்கு போகத்தில் வசிக்கிறதாகத் தெரியும்.

சொற்பமே! மற்றவர்களும் மித்திரனை இச்சிக்க, நம்குல தலைவர்கள் முயற்சி செய்யவர்களாக.

உயிரினையதோழ! வேமொரிறத குன்னூர்சென்ற அதவனஸ் கடலடையுமுன் வருகிறேன்.

பார்த்தவுக்கு மாயன்போன்ற சிநேகா! உனக்குக் குன்னூரில் பழக்கமுண்டா? சங்கம் பாடசாலை நடைபெறுகின்றதா? நம்குல மித்திர ஆலயுவின்றதா? விசேஷமென்ன?

அங்கே எனக்குப் பழக்கமுண்டு. சங்கம், மித்திரன், என்றபேச்சேசெவிபடாது. பாடசாலை அவ்வளவு கவனமில்லை, அவ்வூரில் நாம் விசனிக்கவேண்டிய சங்கதி யொன்றுண்டு. அதாவது, நம் வயதுச் சிறுவர்களிலேசுர், படிப்பை விரும்பாது விவசாயத்தையே விரும்பிக் கல்விக்கு ராபமிருக்கின்றனர். வரின் மத்தியில் சுமார் ரூபாய் (15000) செலவுசெய்து ஒரு மண்டபங்கட்டி இருக்கின்றார்கள்.

ஆஹா! மண்டபம் எதற்காக! பாடசாலைக்கு ஆமா?

கம்பினைத்தார்கள் ஓய்வுநேரங்களி விருப்பதற்காகவாம். மேல் மாடியுமுண்டு, ஆலையால், பள்ளிக்கூடத்திற்காகும்.



அப்படியானல், நம் பண்ணைவர் குலத்தாநிக்க, குன்னூர் நாடார்களெல்லாம் "ஊக்கமது கைவிடேல்" என்ற நீதிப்படி கலிசாலையை நியமனம் செய்தும் "சேரிட மறிந்துசேர்" என்பதை நினைத்து வந்திராமிருப்பில் உடக்கப்போகும் சங்கத்திற் சேர்ந்தும், விவசாயத்தற்ற வினைஞர்களுக்குக் கல்வியோதுவித்தும், வாடாமுயற்சியாய் நாடார்குல மித்திரனை, இச்சித்தும், என்றும் புகழ்பெறுவாராக. 'இளமையிற்கல்' என்ற ஔவையாரின் சொல்லுக்கடங்கிப் பாலியர்கள் நடப்பாராக.

மித்திரா! நாம் சிறியவர்களாகையால் நம் சம்பாஷணையில் ஏதாவது குற்றமிருக்கக்கூடும் அவைகளை நம் பெரியோர்கள், தேன்கூட்டில் இருப்போன்ற வஸ்து இருப்பினும் தேனைவிரும்பி அத்துடன் பிழிந்து தேனைக் கைக்கொள்வதுபோல், பொறுத்துக் கொள்வாராக. ஆதலால்! போய்வருகிறேன்.

வ. ஈ. ச.
வி. ர. ச.

---

## என் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

இந்த "அம்மா என்ற சப்தத்திலிருந்தே பாலஷ பிறந்தது. ஒரு சிசு ஜனனமானவுடன் கவனித்தால் "அ" என்ற சப்தத்தையே முதலில் உச்சரிக்கிறதென்பதை ஆராய்வோர் அனைவருக்கும் புலனுகும். இரண்டாவதாக உச்சரிக்கப் பழகும் சப்தம் "உ" என்பதுதான் இன்னும் சின்னூட்செல்ல அக்குழந்தை "ம்" என்ற சப்தத்தையும் மூன்ருவதாக உச்சரிக்கிறது. இம்மூன்று சப்தங்களேயும் உச்சரிக்கப்பழகின பின்னரே மற்ற சப்தங்களில் பழக ஆரம்பிக்கிறது. அ. இ. உ. இம்மூன்று சப்தங்களும் தனிஇயற்கை சப்தங்கள் இவைகள் சுயம்பாகவே வெளிவருகின்றன. ஒரு குழந்தை முதல் முதலாகக் கூறுஞ் சொல் "அம்மா" என்பதாம். யோசித்துப் பார்க்குமிடத்து அம்மா என்ற சப்தம் பிரணவ சப்தமேயாம் இம்மூன்று சப்தங்களேயும் கூறத்தொடங்கிய குழந்தை "அ ம் ஆ" என்று நீட்ட ஆரம்பிக்கிறது. குழந்தை என்றைக்கு "அம்மா" என்று நீட்ட ஆரம்பித்து விட்டதோ அன்றுமுதல் உலகபந்தத்திற்கு உட்பட்டுக்கொண்டது. ஆகவே "நானும்" ஆம் ஆ என்று நீட்ட ஆரம்பித்து உலகபற்றில் அகப்பட்டு விழிக்கிறேன்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

இவ்விதமாய் பேச ஆரம்பித்த நான் அம்மா என்றும் அப்பா என்றும் பாச்சி என்றும் சோச்சி என்றும் சொல்லுவேன். என்னுடைய செவ்விய இரு உதடுகளையும் திறந்துசொல்லும் ஒவ்வொருமழலைச் சொற்களுக்கும் என் கொவ்வைகனியொத்த இரு கன்னத்திலும் ஆனந்தபரவசங்கொண்டு முத்தங் கொடுப்பார்கள். என் அழகிய வாயிலிருந்துவரும் மழலைச்சொற்களுக்காக தவம் செய்வதைப்போன்று எதிர்பார்த்த வண்ணமா யிருப்பார்கள். தினந்தோறும் என்னை அப்பிஞ்சனத்தால் சுத்தஞ்செய்து என் நெற்றியில் குங்குமம் அல்லது கருப்புசாந்து அணிவாள். உச்சு முகர்வாள். கண்ணே கண்ணின்மணியே ஒளியே. ரத்தினமே மாசதமே என்று பலவிதமாய் என்னைக் கட்டிக்கொண்டு கொஞ்சுவாள். தொட்டியிலிட்டு அடியிற்கண்ட பாடல்களையும் பாடுவாள்.

ஆராரோ, ஆராரோ, ஆராரோ, ஆராரோ
கண்மணியே ரத்தினமே முன்ஜனனத்தில்
நீயாரோ நான்யாரோ. (ஆராரோ)
சீரார் பசுங்கிளியே தெவிட்டாத செந்தேனே
பேரார் குலக்கொழுந்தே பெருமானே. (ஆராரோ)
தெள்ளமுதே கும்பமே தித்திக்கும் செங்கரும்பே
பிள்ளை கலிதீர்த்த பெரியபத குஞ்சரமே. (ஆராரோ)
அத்தை மடிமேலும் அம்மான்மார் தோள்மேலும்
வைத்து முத்தாடும் மாகதமே சண்டளராய். (ஆராரோ)

என்றும் இன்னும் பலவிதப் பாடல்களால் என்னை நித்திரைக் கொள்ளும்படி செய்வாள். என் தாயார் ஒவ்வொருநாளும் பாடும் தாலாட்டில் "நீயாரே நான்யாரோ" என்ற வார்த்தைகளைமட்டும் மிகக் கவனமாய் ஆராயலானேன். என் தாயார் சீராட்டி பாலூட்டி வளர்ப் வள்மேல் கண்ட பாடல்களைச்சொல்லி ஏன்? தாலாட்டவேண்டும். அதை ஒரு சிறிய கதைமூலம் தெளிவுறுத்துவேனாகவும்.

(தொடரும்.)

எஸ். அயோத்திராம்.

---



# சங்க விசேஷங்கள்.

## நாடார் மகாஜன சங்கம்.

### 6-வது கான்பரன்ஸ்.

நமது மகாஜன சங்கம் 6-வது கான்பரென்ஸ் ஜூலைமாதம் 26, 27, 28, தேதிகளில், தூத்துக்குடியில் வெகு விமரிசையாக விக்கினமின்றி நடைபெற்றது. சங்கக் கான்பரென்சின் சவிஸ்தாரங்களையும், நமது அபிப்பிராயத்தையும் விவரமாக அடுத்தமாதம் வெளியிடப்படும்.

பத்திராதிபர்.

---

### தமிழ்ச் சங்கம்.

(முன்தொடர்ச்சி)

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்துஎன்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க மீனவபிரான் கீர்த்தியிலே இருந்த அக்கொழுந்தமிழை அவனைப்போல் அவன் இனத்தாரான நாம் வளர்க்க அவசியம் முயலவேண்டும். இதை, பொதுநன்மையைக் கருதும் கனவான்கள் பார்த்து மற்ற தெரிவிக்கவேண்டிய இடங்களிலும் தெரிவித்து தங்கள் ஆழ்ந்த கருத்தில் விசாரித்து, நம்மினத்தார்கள் மிகுதியாய் இருக்கப்பட்ட இடங்களில் ஆங்கிலபாஷைப் பள்ளிக்கூடங்களிருக்கின்றன. காலத்திற்குத் தகுந்தகோலம் என்றபடி இங்கிலீஷ் இக்காலத்தில் மிகுதியாய் படிக்கவேண்டு மென்றிருந்தபோதிலும் எல்லா இடங்களுக்கும் பொதுவாய் ஓரிடத்தில் ஒருகலாசாலை இயற்றுவித்து தமிழை விரும்பாதவர்கள் தவிர, விரும்பினவர்களுக்குச் சொல்லி வைக்கத்தேர்ந்த இலக்கண இலக்கியங்கற்ற ஆசாரியர்களை அமைத்து பாகினுமினிய தமிழைக் கன்னபாகத்தில் ஊட்டி ஆனந்திக்கச் செய்விர்களென்று நம்புகிறேன்.

படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், என்றபடி புலவர்கள்சொன்ன மூலங்களை, வாசிப்பது இவ்விதமென்றும், பிரிப்பது இவ்விதமென்றும், பொருள் இவ்வித



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

மென்றும், சொல்வது இவ்விதமென்றும், எழுவாய் பயநிலை இன்ன தென்றும், தெரியாமல், கண்டபடி வாசிக்கவும், உரைசொல்லவும், தெரியாவிட்டால் விட்டுவிடவும். இருந்தால் நாம் எப்போது தமிழில் கொஞ்சம் தேர்ந்தவரு யிருக்கப்போகிறோம். முன்னோர்கள், நம்மைப் போல் இவ்விதமிருந்தால், நைடதம், பாரதம், இராமாயணம், என்று அரியபெரிய நூல்களை எப்படிச் செய்வார்கள். விடாமுயற்சியாய் அநேக சாஸ்திரங்களைக் கற்றதனாலல்லவோ? மேற்சொல்லப்பட்ட அரிய நூல்களைச் செய்தனர். இக்காலத்தில் அவர்களைப்போல் இருக்க முடியுமோவென்றால் நாம் பேசுவதே தமிழாயிருப்பதினால் மேலான நூற்களைச் செய்யாவிட்டாலும், அந்நூல்களின் பயனும், எழுதவும், பேசவும், வாசிக்கவுமாகிலும் கற்றுக்கொள்ள வேண்டாா?

இப்படிப்பட்ட தமிழினாலல்லவா? அநேக காரியங்களை எனக்குத் தெரிவிக்கவும் நான் இல்லாத குறைகளை தங்களிடத்திற் சொல்லவும் கிடக்கிறது. நம் முன்னோரிருந்த சமயமே சரியென்றிருந்த, நாம் அவர்கள் சொல்லுவித்த தமிழை அதைப்போற் கருதவேண்டாமா? ஜோதிமணி.

## நாடார் மஹாஜன சங்கத்தின் பர்மாக் கிளைச்சங்கம்.

கமிட்டி மெம்பர்களே கவனியுங்கள்,

சங்கத்தைதான் தூங்கவைத்து விட்டீர்கள். நீங்கள் விழித்துக் கொண்டுதானே இருக்கின்றீர்கள். பொது நலத்திற்காக ஆரம்ப சூத்தனமாய் ஒவ்வொருவரிடமும் நபர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய்வீதம் வசூல் செய்தீர்களே, அந்த ரூபாய்களெல்லாம் இப்போது யாரிடத்தி லிருக்கின்றது. சபைதலைவர்கள், பொக்கிஷதார் இவர்களிடம் மிருக்கின்றனவா? அல்லது? உங்களிட மிருக்கின்றதா? ஏன் பேசாமலிருக்கின்றீர்கள். பேசாமலிருப்பது பொதுநன்மைக் கழகல்ல. இன்னின்னாரிடத்தில் இவ்வளவுரூபாய் இருக்கிறதென்ற விஷயங்களை வெளியிடுங்கள். அப்பொழுது வசூலான ரூபாய் ஆயிரத்திற்கு மேலிருக்குமென மதிப்பிடப்படுகிறது. இதன்சம்பந்தமாய் பத்திரிகைகளில் வெளிவரும் வியாசங்கள் இன்னும் உங்கள் பார்வைக்கு கிடைக்கவில்லையா? எப்படியாயினும் பொதுஜனங்களிடம் வசூலித்த பொதுப்பணத்திற்கு வழிவேண்டுமென்பதை கனம் கமிட்டிமெம்பர்கள் கவனிக்கவேண்டும்.



தற்போது பர்மாவிலும், இந்தியாவிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இந்து நாடார் மஹாஜன சபையோ, இப்பொழுதுக் காரியத்தில் தலையிட்டு சீர்திருத்தம்செய்ய இதுவரை முன்வரவில்லை. எனவே பிரஸ்தாப விஷயத்தில் சிரத்தை எடுத்து முன் வசூலானரூபாய்களை தாய் சங்கத்திற்கு கிடைக்கும்படி ஏன் செய்யக்கூடாதென்று நாம் கேட்கின்றோம்.

ஆகவே, கிளைச்சங்கத்தின் காரியாதிகள் இவ்வித நிலைமையிலிருப்பதினால்தான் தாய்ச்சங்கத்தின் விஷயங்கள் பர்மாவில் கவனிக்கப்படாம லிருக்கிறதென்பதையும் நாடார் மஹாஜன சங்கத்தார் கவனிக்கவேண்டும். எம். எஸ். எம்.

## வத்திராயிருப்பு கிளைப்பாலியர் சங்கம்.

செஞ்சாலிவிளை பழனத் திருவோங்கு மழகுற்ற, இன்னகரத்தில் ஓர் கிளைப்பாலியர் சங்கம் கூடிவிட்டது. மிகுந்த நன்மைக்கு காரணமாய்க் கூடிவிட்டது. பலஊர் நாடார்களும், நாமும் இதைப்போற் கூடவேண்டுமென்ற நினைவுக் கிடமாய்க் கூடிவிட்டது. இச் சங்கத்தின் காரியதரிசியாய் ஜவுளிக்கடை மீ. வேலாயுத நாடார் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள் மேற்படி யூரைச்சேர்ந்த, புதுப்பட்டி, கும்மாம்பட்டி, சேதுநாராயணபுரம், தம்பிபட்டி, மாத்தூர், இந்தவூர்களிலிருந்தும், சில புள்ளிகள் சங்கத்திலங்கத்தினராய்ச் சேரப்பட்டார்கள்.

சங்கத்தின் மானேஜர்கள் சுப்பைய நாடார், காமாட்சி நாடார், புதுப்பட்டி நல்லதம்பி நாடார், சேதுநாராயணபுரம் சோதிமணி நாடார் என்றவர்களாம். இச்சங்கமானது எல்லா விஷயங்களிலேயும் மிகுந்த ஊக்கத்தோடு நடைபெறுமென்பதற் கையமில்லை முதன் முதல் இப்போதே சங்கம் ஸ்தாபித்திருக்கிறபடியால் தெரியாத விஷயங்களை தெரிவித்து அதன்வழி நடத்திச்செய்வது மற்ற சங்கத்தின் கடமையாம். கிளைச்சங்கம்போல் ஏனைய விஷயங்களைக் கவனிப்பதனாலும் பாலியர் சங்கம்போற் போதனாமுறை வாசித்தல் பிரசங்கித்தலாலும் "கிளைப்பாலியர் சங்கம்" என்றபேர் பெறப்பட்டது. ரௌத்திரி ஆனிமீ 1௳ முதல் பதினைந்து நாட்களுக் கொருதடவையாக கூடப்படுகிறது. வீ. ரா. சோதிமணி நாடார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## வா ழ் க் கை.

(முன்தொடர்ச்சி)

உலக வாழ்க்கையை வெறுப்பது சாமன்யமல்ல ஆயினும் இவ்வுலகத்தின் அமைப்பு நன்குணர்ந்த பேரறிவாளர் பலரும் உலகவழக்கில் கட்டுண்டவர்களாகக் காணப்படினும் அவர்கள் உள்ளமானது தாமரையிலைத் தண்ணீர்போலும் பற்றற்ற நிலையிலிருந்து ஞானநிலையையே யடையும், எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்விடம், பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை—நல்லார், அறிந்திருப்பா ரானதினால் ரங்கமல நீர்போல் பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு, ஆகவே இவ்வுலகவாசையில் இச்சைகொண்ட நாம் பூர்வ கன்மானுசாரப்படி நாம் எவ்வளவு சுகதுக்கங்களை யனுபவிக்க வேண்டுமோ அவ்வளவேயன்றி மேல்பட்டு நாமனுபவித்தலியாது, 'வருந்தி யழைத்தாலும் வாராதுவாரா, பொருந்துவன போமினென்றாற் போகா' வளம்பட வேண்டாதார் யார்? யாருமில்லை என்றபடி நாம் ஜீவியகாலமட்டும் சந்தோஷகரமான வாழ்க்கையையே எதிர் நோக்குகின்றோம். வருவனவாகிய சுகதுக்கங்களை யனுபவிக்க நாம் சந்தோஷகரமா யிருந்தாலன்றி, நாம் சந்தோஷகரமான வாழ்க்கையை எதிர்நோக்குதலசாத்தியம், சுகத்தையடையவே சந்தோஷ மடைகிறோம். துக்கத்தை யனுபவிக்க சந்தோஷத்துடன் எதிர்நோக்குதல் யாங்ஙன்? அனுபவிப்பதே துக்கத்திலிருக்க சந்தோஷமுறுவது எங்ஙன்!

இதற்கன்றோ அறிவுவேண்டுவது! பேரறிவுவேண்டுவது இதற்கன்றோ!! "வாழ்வது வந்தபோது மனந்தனில் மகிழவேண்டாம், தாழ்வது வந்ததானால் தளர்வரோ தக்கோர்-மிக்க, வூழ்வினை வந்ததானால் ஒருவரால் விலக்கப்போமோ, ஏழையா யிருந்தோர்பல்லக்கேறுதல் கண்டிலீரோ" பிராரப்த வினையின்பயனாய் வந்தெய்தும் சுகதுக்கத்தைச் சமமாகப் பாவித்துச் சந்தோஷத்துட னனுபவிக்கும் பக்குவ மடையாதவரையில் சந்தோஷ மனோஹர வாழ்க்கையை எதிர்பார்த்தல் கூடாமை, ஆயினும் இவ்வுலகில் சந்தோஷ வாழ்க்கையை நாடும் ஒவ்வொருவரும் அதற்கு ஏதுவாகிய பேரறிவைப் பெறவேண்டும், "எப்பொரு ளெத்தன்மைத்தாயினு, மப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு" பேரறிவைப் பெற்றுக்கொண்டால் மேலே கூறியுள்ள சுகதுக்கங்களைச் சமமாகப்பாவித்து அனுபவிக்கும் ஆற்றலுண்டாதலுடன் இப்பிறவியிலும் நாம் தீவினைகளைப் புரியாமல் சத்விஷயங்களி லீடுபட்டு மறத்தை மறந்து அறத்தைப்புரிந்து சர்வலோக சரண்யனாகிய சாக்ஷாத் எம்பெருமானின் திருவடிக்கமலங்களுக்குப் பாத்திரமாவோமென்ப துண்மை, பேரறிவைப்பெறுதல் எங்ஙனேனெனின், தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு. இயற்கையிலேயே சர்வஜீவ தயாபரன் நம் ஒவ்வொருவருக்கும் அறிவு என்னும் சக்தியை யருளியிருக்கின்றார். அவ்வியற்கையறிவை, கல்வியாகிய நல் நண்பனை யடுத்து உள்ளன்போடு நெருங்கிப் பழகிச் செயற்கையில் இயற்கையறிவைப் பேரறிவாய்ப் பிரகாசிக்கச் செய்யவேண்டும். அதுவும் இளமையிற்கல் என்றபடி இளமைமுதல் கூடிபழகி வராவிடில் அவன் அந்தரங்க குணகுணங்களையறிதல் சாத்தியமாகாது. இங்ஙனம் உள்ளன்போடு நெருங்கி பழகுதல் எல்லோருக்கும் இயலாதகாரியமேயாம். ஆயின் இன்னோர் பேரறிவைப் பெறுதல் யாங்ஙனமெனின், எம்போல்வாராகிய இன்னோர் பேரறிவைப் பெறும்பொருட்டே உலகில் பல தேசாபிமானிகளாலும், மதாபிமானிகளாலும், குலாபிமானிகளாலும், பரோபகாரச் சிந்தையுடன், பொதுநல மொன்றையே நாட்டமாய்க்கொண்டு சிரமத்தையும் பொருட்படுத்தாது ஆங்காங்கு பல நற்பத்திரிகைகளை ஸ்தாபித்து, அவரவர்கள் குலாசார ஒழுக்கத்திற்குத் தகுந்தாற்போல் சகல சாஸ்திரசாரத்தையும் ஒருங்குசேரத் திரட்டி இப் பத்திரிகையின் வாயிலாய்ச் சாதாரணக் கல்வியுடையோரும் இப் பத்திரிகையைப்படித்துப் பேரறிவுபெற்று மேன்மையுற்று விளங்குவான் உலகினர்க் குபகரித்துப் புண்ணியப்பேற்றை யடைகின்றனர். சந்திர சூரியகுல க்ஷத்திரியோத்தமர்களே, என்னருமை சகோதரர்காள்! தற்போது நம் குலாசார ஒழுக்கமானது நாளுக்குநாள் குன்றி வருவதோடு, எம்போல்வார் பலருக்கும் நம் குலாசார ஒழுக்கம் எத்தன்மைத்தெனவே தெரியாது மங்கியிருக்கின்றது, இக்காரணத்தினாலேயே அன்னியர் நம்மை க்ஷத்திரியர்என ஒப்புவதற்கு சந்தேகிக்கிறார்கள். க்ஷத்திரியர் என்றால் க்ஷத்திரியத்வம் நிறைந்திருந்தாலன்றோ சந்தேகிக்க இடமில்லாமலிருக்கும், அதாவது நம் குலத்திற்கேற்பட்ட ஆசாரம் ஒழுக்கம் நிறைந்திருக்கவேண்டும். ஆகவே இன்னும் நாம் வாளாவிருப்போமாகில், குலம், ஆசாரம், ஒழுக்கம், என்பதையுமிழந்து இன்னும் க்ஷீணதசையை யடைந்துவிடுவோ மென்பதுண்





Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

மை, ஆகவே இக்குறையை நீக்குவான்பொருட்டு, காலதேச வர்த்தமானங்களுக்கியைய, நம்குலாசார ஒழுக்கத்தின்படி நாம்நடந்து மேன்மையுற்று விளங்கவேண்டுமென்ற நாட்டமொன்றையே முக்கியமாகக் கொண்டு, குலாபிமானத்துடன், சர்வ ஜீவரக்ஷகராகிய சாக்ஷாத் ஸ்ரீ அமுதலிங்கேசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோவிலுக்கு முன்பு ஸ்ரீ அமுதலிங்கப் பெருமானால் நமக்கு அருளப்பட்டதெனச் சொல்லற்கியலும், மகிமையும், பெரியோர்களாசிர்வாதமும் பெற்றிலங்காநின்ற நமது, நாடார் கல்விப்பிரசங்க சபையிலிருந்து, ஷெ சங்கத்தின் தலைவரும், பேரறிவு மனவாற்றலுமுற்ற நமது குலமணியாகிய ம-ா-ா-ஸ்ரீ, கனம் சூ. ஆ. முத்து நாடாரவர்கள் "நாடார்குல மித்திரன்" என திருநாமமிட்டு பெயருக்கு தகுந்தாற்போல் நாடார்களுக்கு வேண்டியவற்றை எல்லாமளித்துதவும்படியாகிய ஓர் நற்பத்திரிகையை நடத்த வெகு ஊக்கத்துடன் முன்வந்துளார். இன்னார் மனவூக்கமும் கொண்ட கோரிக்கையும் இளம்பிறை சந்திரன்போல் நாளுக்குநாள் மென்மேலும் விருத்தியாகி வரவேண்டுமாய் எம்பிரான் திருவடிக் கமலங்களை இறைஞ்சுகின்றனன், இன்னும் இப்பத்திரிகைக்கு உபபத்திராதிபராக நின்று நமக்கு அனுகூலமான நல்விஷயங்களை இப்பத்திரிகையின் வாயிலாய் எடுத்துக்காட்டவிருக்கும் நமது ம-ா-ா-ஸ்ரீ, ஆ. சொக்கலிங்க பாண்டியரவர்களின் நன்றியை நாம் ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று. நிற்க, நாம் பேரறிவுபெற்ற மேன்மையடையும்பொருட்டு தக்க சமயத்தில் வெளிப்போந்துள்ள இந் "நாடார்குல மித்திரனை" நாம் ஒவ்வொருவரும் உள்ளன்புடன் வரவேற்று அதன் போதனையாகிய விஷயங்களை வாசித்துக் கருத்திருத்தி மேன்மையடைவோமாக, அன்பர்களே! எங்குல நண்பர்களே!! கேட்டதெல்லாம் தருவதாகிய கற்பக விருக்ஷமானது ஆதியில் அதாவது சில்லாண்டுக்கு முன்னர் அறிவாளிகளால் அறிவு என்னும் வித்தைவிதைக்க நீடிஞரும் ஆகிய பயிராய் முளைத்துத் தளைத்துச் செடியாய் நாளுக்குநாள் விர்த்தியாகி தற்போது, "நாடார் கல்விப்பிரசங்க சபை" என்ற கற்பகவிருக்ஷமாகிய பலன்கரும் பருவநிலையுற்று "நாடார்குல மித்திரன்" என்னும் புஷ்பம் புஷ்பித்திருக்கின்றது. அன்பர்காள் சிறுபயிராயிருக்கும்போது அதற்குப் போஷணை செய்து வளர்த்து உருவாக்கியது பெரிய காரியமேயாயினும் பலன் தருவதாகிய இப்பருவத்திலேயே முன்னைவிட போஷிப்பு அதிகம் வேண்டும், இப்பருவத்தில் சரியான போஷிப்பு இல்லாவிடின் எதிர்



பார்த்த பலனையடைவது முடியாதகாரியம் எதிர்பார்த்த பலனையடையாது போவதோடு சிறுபயிராயிருக்கும்போது அதை வளர்ப்பதற்காக எடுத்துக்கொண்ட பிரயாசையெல்லாம் விழலுக்கிறைத்த நீராய் வியர்த்தமா மென்பதை இங்கு முக்கியமாய்க் கவனிக்கவேண்டும், இவ்வமயத்தில் நாம் ஒவ்வொருவரும் சந்தாதாரராக நின்று அதன் போஷிப்புக்காக ஏற்பட்ட சந்தா ரூபா 1-8-0-ம் ஈந்து அன்புநீர் பாய்ச்சி வருவோமாகில் இப்பொழுது புஷ்பித்திருக்கும் புஷ்பமானது பயன் ஆகிய காயாகி நன்மை என்னுங் கனிதரும் நன்மையாகிய கனியை வாழ்நாளாகிய நாவினால் சுவைத்துச் சாப்பிட சுகம் என்னும் ருசியைப்பெற்று இனிமை என்னும் இன்பமகிழ்ச்சியை யடைவோமென்பதுண்மை எல்லாம்வல்ல இறைவன் நம்மெல்லோரையும் ரக்ஷிப்பாராக. சுபம்!

க. மு. ச. கந்தஸாமி.

---

## ஓர் விநோத சம்பாஷணை.

சார் சார் மோட்டார் டிரைவரே மோட்டாரை நிறுத்துங்கள். இது தான் நல்ல இடம் இங்கு உட்கார்ந்துகொண்டு சம்பாஷிக்கப் போகிறோம்.

அண்ணா, நமது மகாசங்கத்தின் கோரிக்கைகளை நடத்திவைக்க மானேஜர் என்ற பதவியை ஒப்புக்கொண்டு அதுவிஷயமாய் அரும் பெரும் பிரயாசையுடன் உழைத்துவரும் ஸ்ரீமான் பழனிவேல்நாடார் அவர்களின் தயாள சிந்தைதானென்ன அவர்கள் சமீபத்தில் தூத்துக்குடி நாடார் ஐக்கியசங்கம் முதல்வருடக் கொண்டாட்டத்தில் திருவாய்மொழிந்த உபந்நியாசத்தின் சாராம்சம் எத்தன்மையுடையது இதுபோன்ற உத்தமகுணமுடைய க்ஷத்திரிய புருஷர்களை நம் இந்திய மாதா, நம் தமிழ்த்தாய், நம்குலத்தாய் நம்ஜாதிக்கு பாடுபடும்படி காட்டிக் கொடுக்கமாட்டாளா?

தம்பி. ஆழக்கடலிலே விலைமதியா முத்துக்கள் சிப்பியால் மூடப்பட்டு கிடப்பதுபோல் நம் சாதியிலும் வுத்தமசிகாமணிகள் அநேகர் உண்டு ஸ்ரீமான் பழனிவேல் நாடார் அவர்களை நமக்குக் காட்டிக் கொடுத்த தாய் அவர்களையும் காட்டிகொடுப்பாள்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

அண்ணா. நமது பெரியோர்களாலும் பால்யச் சிங்கங்களாலும் நம்மவர் வசிக்கும் பல இடங்களில் அங்காங்குள்ள பலசங்கங்கள் நடைபெறுவதாக தினசரி வாரமாசப் பத்திரிகைகளில் காணக்கிடைக்கிறதே இவைகளின் நோக்கமென்ன? என்ன செய்கிறது?

தம்பி. அச் சங்கங்களின் நோக்கமெல்லாம் நம்சாதி முன்னேற்றமடையவேண்டு மென்பதே. அதற்கு வேண்டிய வேலைகளையே அவைகள் செய்துவருகிறது.

அண்ணா. சில வருஷங்களாக பல ஊர்களில் நமது பெரியோர்கள் ஒற்றுமைகுன்றி நிர்வாகப் பொறுப்பை சரியாய் கவனிக்காமல் விசேஷ கவலைக்கிடமாய் செய்துகொண் டிருந்தார்களே அவைகள் எக்கதியி லிருக்கின்றன.

தம்பி. உலகபோக்கானது விரைவில் மாறிமாறி வருவதாலும் சங்கத்தார்களின் வேண்டுகோளினாலும் பெரியோர்கள் தங்கள் பிடிவாதத்தை விட்டுக் கொடுத்துக்கொண்டும் விட்டுக் கொடுக்கவேண்டிய தவசியமே என்றுணர்ந்தவர்களாயு மிருக்கிறார்கள்.

அண்ணா. அங்கங்கு கூடியிருக்கும் சங்கங்களில் சுமார் எத்தனை சந்தாதார்கள் இருப்பார்களென்று உங்களால் சொல்ல முடியுமா?

தம்பி. 25-முதல் 150-வரையும் அதற்கு மேலும்கூட அந்தந்த சங்கங்களின் மதிப்புக்கு தகுந்தபடி சந்தாதார்கள் இருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன்.

அண்ணா. நமது பாரதமாதாவின் சேக்ஷத்தைக்கோறும் தேசபக்தர்கள் அவர்களின் லட்சியம் நிறைவேற பிரசாரவேலை அவசியமென்று தெரிந்து நமது பாரதநாட்டிர்க்குள்ளும் லண்டனுக்குபோயும் பிரசாரவேலை செய்வதோடு நாட்டுப் புரங்களிலுள்ள ஜனங்களுக்கு நம் லட்சியங்கள் மிக அவசியமாய்த் தெரியவேண்டுமென்று அறிந்து நாட்டுப் புரங்களிலும் தங்கள் நோக்கங்களைப் பரப்புகிறார்களல்லவா? நமது மகாசங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற பட்டணங்களிலும் கிராமங்களிலும் நமது மஹாஜனசங்க மானேஜராலும் நாடார்குல மித்திரன் பத்திராதிபராலும் குலாபிமானிகளாலும் அங்கங்கு சில இடங்களில் பிரசாரவேலை செய்யப்பட்டு வரப்படுகிறதாயினும் நம்மவர்கள் வசிக்கும் கிராமங்கள்தோறும் போய் நம் லட்சியங்களைத் தெரிவிக்க போதிய அளவு பிரசாரர்களில்லையாகையால் அங்கங்குள்ள சங்கத்தார்களே நமது மஹாஜனசங்க லட்சியங்களையும் அவரவர்கள் ஊரிலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் பரப்புவதற்கும் சங்கம் பள்ளிக்கூடமில்லாத ஊர்களிலும் அவைகள் ஏர்ப்படுத்தவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளக்கூடாதா?



தம்பி ஏன் செய்யக்கூடாது? மனமிருந்தால் எல்லாம் செய்ய முடியும். ஒவ்வொரு சங்கத்திலும் பிரசாரவேலை செய்யக்கூடிய திறமை வாய்ந்தவர்களைத் தெரிந்தெடுத்து நடவடிக்கை நடத்துவார்களாயின் சங்கம் பள்ளிக்கூடங்கள் இல்லாத ஊர்களில் அவைகள் ஏர்ப்படவும் நமது மகாசங்கத்துக்கும் நாடார்குல மித்திரனுக்கும் விசேஷ சந்தாதாரர்கள் சேர்ந்து நமது லட்சியம் எங்கும் சீக்கிரமாய் பரவி நம்குலம் சீக்கிரம் முன்னேற்ற மடையவும் ரெம்ப ஏதுகரமாயிருக்கும்.

அண்ணா. நாமும் நம்முடன் பிரசார வேலைசெய்யக்கூடிய அபிமானிகளையும் சேர்த்துக்கொண்டு முதலே பிரசாரவேலையை ஆரம்பிப்போம். (எங்கள் விண்ணப்பம்) சங்கத்தார்களே பெரியோர்களே நண்பர்களே நம் முன்னேற்றத்துக்கு அவசியமான லட்சியங்களை சீக்கிரம் எங்கும் பரப்பவேண்டும். பிரசார வேலைசெய்யப் பிரியமிருக்கும் சில அபிமானிகளுக்கு முதலாளிமார்களாலோ குடும்பத்தார்களாலோ ஓரளவு கஷ்டமிருக்கலாம் இருப்பினும் இனியவார்த்தைகளால் தங்களுக்குச் சாதகமேற்படும்படி செய்து கொள்ளவேண்டும் நம்ஜனசமூக முன்னேற்றத்தைக் கருதியுழைக்க நினைக்கும் அபிமானிகளுக்கு முதலாளிமார்களும் கருணைகூர்ந்து ஓரளவு விட்டுக்கொடுத்து அவர்களுக்கு உற்சாகம் ஆயிரம் மணங்கு பிரசங்கத்தைக் காட்டிலும் அணுப்பலம் அநுஷ்டானமே சிறந்ததென்பது அவதார மூர்த்தியாகிய சுவாமி விவேகானந்தரின் வாக்கு கொடுக்கவேண்டும். எங்கள் நோக்கம் நிறைவேற எல்லாம்வல்ல பரம்பொருள் கருணை பரிபாலிப்பாராக.

வேல்.

---

## அறம்.

பக்திக்கும் சித்திக்கும் முத்திக்கும் யுத்திக்கும் எத்திக்கும் புகழ்பெற்ற மித்திரனே! உனக்கு வியாசமாகவும், என்னன்பருக்கு நேசமாகுமென்ற இவ்விஷயமெழுத முன்வந்தேன். எவ்விஷயமெனில், உரத்திற்கும் கிரத்திற்கும் வரத்திற்கும் பரத்திற்கும்சிறந்த அறத்தை எழுத துணிந்தேன். என் துணைவர்களே!

அறம் எத்தகையுளதென கவனிக்குங்கால், உலகசாரம் புகட்டப் புகுந்த உத்தமியாகிய ஔவைப் பிராட்டியுங்கூட, சத்தியம், கொல்லாமை, கல்வி, ஒழுக்கம், இப்போர்க்கொற்ற எண்ணிறந்த கோள்பாடுகளிருக்க, அவைகளையொளித்து அறம்செய்ய விரும்புயென்றே அஸ்திவாரம் போட்டனள். ஆனதால, அறத்திற்கு நிகரானேயன்றி மற்றொன்றில்லை. அஃதையுன்னியே அறம்செய்யவேண்டும். கனவான்களே! அறம்செய்வதா லடுப்பதேதென ஐயமுண்டோ?

அன்புரு அறத்தினு லடுக்கு மின்பமே
அன்புரு அறத்தினை மறப்பிற் கேடுரும்.

என்று உயர்ந்தோருரைத்த துன்னி அறம் செய்யவேண்டும். அன்னையும் பிதாவும், அறமேயாகும்.

நண்பர்காள்! கைப்பொருள்பெற்ற அன்றே கடவுளாலயத்திற் கியந்து மெய்ப்படும் புராணநூல்கள் விருப்பமெனக் கேட்டுவந்து வைப்பென பிறப்போற்கியந்த வருபவருளரேற் கூற்றம். மொய்ப்புயந் தண்டந்தப்பி முன்னவனின் பத்தாள்வான்.

என்றுஉற்ற தூயோருலகமுய்ய உரைத்திருக்கின்றனர். பெரியோர்கள் மொழியைப் பிசகாது உன்னுங்கள். ஒப்பற்ற அறத்தையே ஒரேமனதாய்ச் செய்யுங்கள் போனநாள் போகட்டும், புதியநாளை விடாதேயுங்கள். விட்டுவிட்டு, பசியிருந்த பின்னெல்லை விதைப்பது போலும் வீட்டிடைத் தீபற்றிக்கொண்டு நசியும் போததையவிக்க வாரு வெட்டல்போலும் போர் நடக்குங்காலை விசிகநூல் கற்கமுயலுவதும்போலும் நீங்கள் கடமிஞ்சி விக்கிச்சிக்கி இசிவுகொண்டு சாங்காலமெப்படி நீயறஞ்செய்வா யிதயப்பேயே, என்று முன்னோர்கள் மொழிந்த முதுமொழியை உன்னுங்கள். இப்போதே இயன்ற அறத்தைச் செய்யுங்கள். அறம் செய்குவோமாகில், எல்லாம்வல்ல அப்பன், நம்மை கைகொடுத்துத்தூக்கி, அருமை மைந்தா! வென்றழைத்து, ஆசனமளித்து, அவனியெல்லாம் நமதங்கமாக்கி, ஆனந்த சாகரத்தைத் தாக்கி, அரிய ஆட்சியுமளிப்பான்.

ஓடியலைந்து வையகமுற்று முழன்றுழன்று
தேடியெடுத்த திரவியம் யாவையுஞ் செத்தபின்பு
நாடி யெடுப்பதுமுண்டோ மாந்து நடக்குநெஞ்சே
வாடியிராதஞ் செய்குவாய் குணங்குடி வாய்த்திடுமே.

என்று குணங்குடியாருங் கூறியுள்ளார். அஃதையுன்னுங்கால், அவர் கூறியதுபோலுயிர் தூக்கும்போதுங்கூட பணத்தை விட்டு



விட்டுப் போகிறோமேயென்ற பாதகிப்பைக் கண்டோமேயல்லாது வேறொன்றுங் கண்டோமில்லை. ஆனதால், இயன்ற அறத்தை இப்போதே செய்யவேண்டும். இகபர மெதிர்நிற்கும் பொருளுள்ளான் பொருள் வைப்பதற்குத் தகுந்தயிடம்யாதெனில், ஏழைகட்கும் யாசிப்பவர்கட்கும் கொடுப்பதே. அதுவே பொருள்வைக்கத் தகுந்தயிடம். அதுவே அழியாக்கொடைவாங்கல். இக்கொடையாளி யிகத்தை யொளித்துப் பரத்திற் செய்தியகாலத்தும நம் பரமபிதாவானவர், அப்பா! வந்தனையா, அருமைமைந்தா! வந்தனையா, ஒப்பற்றவனே! வந்தனையா, யானளிக்கும் பொருளையெனக் களித்த இகபரனே! வந்தனையா, வெனமுகமன்கூறி பரமாச்சியபட்டாபிஷேகஞ்செய்வர். பொன்னைத்தேடிப் பொட்டணங்கட்டிப் பொருள்காத்த பூதமெனக்காத்த ஈயாத இலோபிகளிகத்தை யொழித்துப் பரத்திற் செய்தியகாலத்தில், பாவி! வந்தனையா, சண்டாளன்! வந்தனையா, என்பொருளையெனக்களிக்காத இலோபி வந்தனையா, நீ இங்குவரப் பாத்திரனன்று எனக்கடிந்து கட்டளையிடுவர். என்றறிந்த பொய்யாமொழிப் புலவர்.

அற்றாரழிபசி தீர்த்தலஃ தொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

என்று ஆன்றோருமையா யுரைத்ததுன்னி அறவழியில் நடக்க வேண்டும். அற்பச் சந்துவாகிய புளுவுங்கூட, ஜீவகாருண்யங் கருதி யொருவன் பசியமர்த்துமாறு, தன்னுயிரைக்கொடுத்து உய்யப்பெற்ற வகக்கேள்வி யுற்றறற்றோர்களே, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். க்ஷத்திரியர் குலத்திற்கு உத்திரமாய் வந்த நமது மித்திரனை பாதரிக்கவும்வேண்டும்.

செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்

என்றதுன்னியும், நம் முன்னோர்கள்செய்த அறம்பின்னோடச் செய்த சாதித்துவேசம் நீங்கும்பொருட்டும்.

எக்குலமுஞ் சக்கிலமா மேதுகுலம் விண்மார்க்கம்.

என்ற முதுமொழியறிந்த நமது ஏகாதிபத்தியத்தின் முன் நாம் செய்யும் அறம் ஒன்றுண்டு. அஃது யாதெனில், நங்குல புத்திரர் புத்திரிகளை கல்வியென்னும் அமுதருந்தச்செய்து, வல்லவர்களாய் பல்லோர்புகழ, உல்லாசம்பெரு முத்தியோகத்திலும், வியாபார விவசாய கைத்தொழிலிலும், அமரச்செய்வதே அவ்வறவாகும். இதுவே எல்லோரும்புகழும் நல்லறமாகும். கற்றவர் சொற்றன ருற்றவர்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

மற்றவர் பற்பலரும் புகழப்பெற்றிடலாம். அறிந்து நடக்க அநேக வந்தனம்.

சொற்றிரம் பெற்றரு ளுத்தமர் மெச்சிடு முத்தையனருளிய மித்திரனே! மறத்தைச்செய்யுங் காமிகளிடத்தில் அறத்தைப்பற்றிக் கூறுவோமாகில், உருத்துமற்ற வெறுத்துப் பேசுவதுடன், பொருளைக் கொடுத்துவிட்டுத் தெருவழியே போகச்சொல்லிக் கூப்பாடு போடுகிறுனென்று ஒப்பாத தப்புச்சொல்லை மப்பாகப் பேசுகிறார்கள்.

ஆஸ்தியிழந்து நால்திகளுடு ஏற்றுத் திரியும்படி சாற்றுவோர் யாருமிலர்; யானுங்கூட இயன்ற அறத்தை இப்போதே செய்யுங்களென்றே கூறியிருக்கிறேன். மித்திரனே! இவர்கள் துன்மதியை நன்மதியாக்க என்பதிக் கடவுளுக்குப் பயன்துதி செலுத்தாநின்றேன்.

ப. சி. பொன்னம்பல நாடார்.

---

## நிகழ்கால விஷயங்கள்.

வித்தியாதானம்:—அருங்குளம் நாடார்கள் கட்டுகிற வித்தியாசாலைக்கு மதுரையிலுள்ள நாடார்கள் இனவாரியாக ரூ. 180. வசூலித்துக் கொடுத்திருப்பதாயறிந்து சந்தோஷிக்கின்றோம்.

கோளத்தூர்:—நாடார்கள் ஐக்கிய சங்கம் முதலாவது வருஷக் கொண்டாட்டம், கனம் P. பழனிவேல் நாடார் பி. ஏ. அவர்கள் மார்த்தாண்டன்பட்டி கனம் மா. வயி. இ த்தினசாமி நாடார் தூத்துக்குடி ஆனரரி மாஜிஸ் டிரேட்டவர்கள் அக்கிராசனத்தின்கீழ் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டிருக்கிறது. எல்லாம்வல்ல இறைவனருளால் சங்கம் வளர்ந்தோங்கும்படி கடவுளைப் பிரார்த்திப்போமாக.

பிரசித்திபெற்ற பெரியவர்:-பாரதபுத்திரரின் ஜனநாயக சற்குணரும், தேச ஜனங்களின் நேச சஞ்சீவி போன்றவரும், மகா விற்பன விவேகியுமான, லோகமான்ய ஸ்ரீமத் பாலகங்காதரதிலகர் என்னும் பேர் பெற்ற பெரியவர், சாடெங்கும்நடுங்க சாயுச்ய பதவி எய்தினர். இந்தியத்தாய் இவர்போன்ற இன்னொரு புத்திர ரத்தினத்தை நமக்களிப்பதெந்நாளோ?

பத்திராதிபர்.

---



## விடுகதை வினு.

### விருத்தம்.

தசமொன்று தமிழெழுத் துள்ளதோர் ககரமாம்
சங்கரன் வாழும் ஊராம்
சரியாக ஒன்றிரண் டாயவன் பன்னியாம்
தருமஷ்டம் சதுபஞ் சமும்
நிசமாக விமலையாம் ஆதிரெண் டைந்திறுதி
நிகருமோர் திதிபு மாகும்
நேராதிக் காதியும் பஞ்சமும் பாக்கியமாம்
நிகரேழு மூன்று ரிஷபம்
வசமாக வஷ்டமைக் துந்திது நவபஞ்சம்
மாதபா மாறு மைந்தும்
மதன் மங்கை நவம்பத்து பதினொன்றும் வஞ்சியாம்
மகிழ்தசத் தொன்று மொன்று
நசமுற்ற வாளிபாம் திரியுபய மைந்துகோ
நலமான சத்ய மாகும்
நவமாறு பஞ்சமு மபக்கமிவ் வூர்பெயரை
நலமாக கூறு வீரே.

ச. சி. இராமையா நாடார்.

---

## விடுகதை வினு விடை.

வேல். S. பொன்னம்பலம் விடுத்த கணித வினுவிற்கு. ஆனந்த நாடார். முத்தைய நாடார். ச. சி. ச. அருணசல நாடார். வெற்றிவேல் நாடார். பொன்னுசாமி நாடார். முதலியோர் சரியானவிடை எழுதியிருக்கின்றார்கள்.

பத்திராதிபர்.

---

## உஷாரா இருங்கள்.

கிலோனைச்சேர்ந்த டிக்கோயா என்னும் ஊரில் ஏம். சுதந்தரம்பிள்ளை என்பவர், நம்மித்திரனுக்கும் க்ஷத்திரிய மித்திரனுக்கும் சந்தா சேர்க்க வந்திருப்பதாகப் பொய் வார்த்தைபேசி, அங்குள்ள நாடார்களிடம் 15 சந்தாவுக்குப் பணம் வாங்கிக்கொண்டு வந்ததாக ஒருவர் தெரிவிக்கின்றார். (வயிற்றுப் பிணியைப்போக்க வகையின்றி இவ்வித வஞ்சகஞ்செய்து வயிர் பிழைப்பவர் இப்பஞ்சகாலத்தில் மிகுதியுள்ளார். சந்தா வசூல்செய்தவர் சந்தோஷமாகக் காலங்கடத்தட்டும்) ஆயினும் நம்மிரு மித்திராபிமானிகள் இனிமேலிவ்வித மோசக்காரரின் வயப்படாதிருக்க வற்புறுத்துகின்றோம்.

பத்திராதிபர்.



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## மதிப்புரை.

விஜயசுந்தரம்:—இதுவோர் சிறந்த செந்தமிழ் நாவல். இவ்வித நாவல்கள் வெகுவாய் மேல்நாட்டிலேயே பிரஸ்தாபிக்கப்பெற்று சில காலமாக நம்நாட்டில் பரவிவருகின்றது. இவ்வித கதைகளில் சில அநுசாரவழக்க பழக்கங்களை விலக்கியும், ஆசார அநுபோக உண்மையறிந்து நடக்கவும் பிரஜைகட்கு பிரதியுபகாரம் விளங்குகிறது. ஆயினும் தற்காலம் பணத்தாசைகொண்டு ஜனத்தை மயக்க வெளிவரும் சில நாவல்கள் விஞ்ஞனவிபரீத துற்கிருத்தியப் பொருளைத்தன் தேகத்தில் அணிந்துலவுகின்றன. நமது விஜயசுந்தரமோ, அங்ஙனமின்றி நாவல் என்பதின் உத்தேசக் கருத்தென்னவோ அதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக்காட்டி யிருக்கிறது. இக்கதையில் மாறுவேடம் புனைந்துள்ள மாரியாயி என்னும் பெண்மணிபால் பெண்களின் கற்பிலக்கணத்தைக் கற்பிதத் தன்மையாக எழுதியது சாதுர்யமே. கதாநாயகன் சாதுர்ய சற்குண சமயோசித தந்திர விவேக சாமார்த்தியத்தைப் படிக்கப் படிக்க ஆசை என்னும் மேலீட்டடங்கவில்லை உத்தேசிக்குமிடத்து இந்நாவல் தேசோபசாரத்தீபம் என்பதிற் றடையில்லை. இதன் ஆசிரியர் ஸ்ரீமாந், தி. ம. பொன்னுசாமி பிள்ளை அவர்களின் செந்தமிழ்த்திறமை செழித்தோங்குமாக.

விஸ்வகர்மன்:—என்னும் வாராந்தப் பத்திரிகை யொன்று வரப்பெற்றோம். இது விஸ்வகுல பிராமணர்களின் நன்மையைக்கருதி சென்னையில் வெகுநாளாக நடைபெறுகின்றது. தமது குலத்தின் ஆசார அநுபோக வழக்கங்களைத் தற்கால வியல்புக்கேற்றவாறு தம்மினத்தவருக்குப் போதித்துப் பிரதிவாரமும் தவராது வெளிவருகின்றது. விஸ்வகுலாச் சாரியார்களொவ்வொருவரும் இதனை ஆதரிக்க வேண்டும். ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனிப்பத்திரிகைகள் இக்காலத்தில் வேண்டியதா யிருக்கிறது.

வைசிய மித்திரன்:—காரைக்குடியிலிருந்து வாரந்தோறும் வெளிவரும் இப்பத்திரிகையில் பற்பலதொழிற் குறிப்புகள், வியாபார விவசாய கைத்தொழிற் போதினிகள், முதலிய பல அருமையான வியாசங்கள் மலிந்துள்ள இப்பத்திரிகை வைசியர்களின் முன்னேற்றத்திற்கோர் துணைக்கருவி என்னலாம். நம்நாட்டில் நவீனகமாக தற்கால நாகரீகத்திற் கேற்றபடி எவ்வளவுக் கெவ்வளவு பத்திரிகைகள் உதயமாகுமோ அவ்வளவுக்கும் நம் மிந்திய சகோதரர்கள் முந்திய நன்மை பெறுவார்க ளென்பதற் கையமுண்டோ!

பத்திராதிபர்.

---

நமது மித்திரன்

## போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு மாஜி கௌன்சிலர், ஒலவக்கோடு வர்த்தகம். ம-ா-ா-ஸ்ரீ, க. கு. பொன்னப்ப நாடார் வரவு ரூபா 50—0—0

அருப்புக்கோட்டை நாடார் குலாபிமானியும், ஸ்ரீ அமுதலிங்கேஸ்வரர் தேவாலயதருமகர்த்தாவுமான ... ர்கள்

## சரித்திரம்.

அஸரியா நாடாரவர்கள் ஜீவிய சரித்திரம் அவர் போர்முனையில் செய்த வீரதீரம் ஒவ்வொரு போர்க்களத்தின் நிலைமைமுதலிய விருத்தாந்த விவரமும், பலவிதப் போர்வீரப் படங்கள் அடங்கியதுமான புஸ்தகம் அச்சிலிருக்கிறது. அதிசீக்கிரம் விற்பனைக்கு வெளிவரும் வேண்டுவோர் முன்னதாக எழுதிக்கொள்வது நலம்.

பத்திராதிபர்.

---

## மேக எண்ணெய்.

இந்த எண்ணெயை 10-நாள் சாப்பிட்டால் தீராத வெள்ளை, மூலக்கொதிப்பு, ஆசனம் எரிச்சல், ஆசனம் கடுத்து அடிக்கடி மலம் போதல், தந்திமேகம், மஞ்சள்வெள்ளை, இரத்தவெள்ளை, சுருக்கு வெள்ளை முதலிய சகல மேகரோகங்களையும் ஒழிக்கும்.

10-நாள் எண்ணெக் கிரயம் ரூபா 7 0 0 பத்திய முதலானதும் தபால் மூலம் விவரமாகத் தெரிவிக்கப்படும். தபால் செலவு வேறு.

அதிசாரபேதி, கிரணிபேதி, மூலகிரணிபேதி, பாரிச வாய்வு, மேகவியாதியால் கை கால் முடக்குவாய்வு, க்ஷயம், மந்தாரகாசம், நாள்பட்ட சோகை, பாண்டுகள், மகோதரம், பெரும்வயிறு, தீராத நீர் வியாதிகள், மதிமேகம், கண்டமாலை, மேகசுரம், தேகம் நாளுக்குநாள் மெலிந்துபோதல், அண்டவாய்வு தீராத ஒற்றைத்தலைநோய். ஸ்திரீகளுக்கு மாதவிடாய்ச் சம்பந்தமாய் உண்டாகும் சகலவியாதிகள் முதலிய வியாதிகளுக்குத் தக்க மருந்துகள் கொடுக்கப்படும். தயவு செய்து ஒருதரம் பரீக்ஷை பார்க்கவும்.

கு. ரு. சா. வைத்தியர் சுப்பிரமணிய முதலியார்,
நெ. 21, தாண்டவராய பிள்ளை வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## மதிப்புரை.

விஜயசுந்தரம்:—இதுவோர் சிறந்த செந்தமிழ் நாவல். இவ்வித நாவல்கள் வெகுவாய் மேல்நாட்டிலேயே பிரஸ்தாபிக்கப்பெற்ற சில காலமாக நம்நாட்டில் பரவிவருகின்றது. இவ்வித கதைகளில் சில அனுசாரவழக்க பழக்கங்களை விலக்கியும், ஆசார அனுபோக உண்மை யறிந்து நடக்கவும் பிரஜைகட்கு பிரதியுபகாரம் விளங்குகிறது. ஆயினும் தற்காலம் பணத்தாசைகொண்டு ஜனத்தை மயக்க வெளிவரும் சில நாவல்கள் விணைவிபரீத துற்கிருத்தியப் பொருளைத்தன் தேகத்தில் அணிந்[illegible] நமது விஜயசுந்தரமோ, அங்ஙனமின்றி நாவல் [illegible] ஓர் மனிதன் இரவில் 12 மணிககு நித்திரை உள்ளங்கை

1920 வருஷத்திய கியாலண்டர் இனம்.



ரூபாய் 100 இனம்.

விஷந்தீண்டி விட்டால் அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிற தல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சிவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

விலை 1-பாக்கெட் அணு 0—8—0
விலை 12-பாக்கெட் ரூபா 5—0—0

வி. எ. எஸ். பாணி,

நெ. 3, இருளப்பன் தெருவு, மதராஸ்.

நம்து மித்திரன்

## போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிஸிபல் கௌன்சிலர், ஒலவக்கோடு வர்த்தகம். ம-ா-ா-ஸ்ரீ, க. கு. பொன்னப்ப நாடார் வரவு ரூபா 50—0—0

அருப்புக்கோட்டை நாடார் குலாபிமானியும், ஸ்ரீ அமுதலிங்கேஸ்வரர் தேவாலயதருமகர்த்தாவுமான ஸ்ரீமான் மு. மு. முத்துசாமிநாடார் அவர்கள் செல்வப் புதல்வர், மிஸ்டர் மு. மு. முத்துக்குமாரசாமி நாடார் வரவு ரூபா 50—0—0.

சென்னை நூல் வியாபாரம் நாட்டாண்மை, ம-ா-ா-ஸ்ரீ, சா. ஆறுமுக நாடார் வரவு ரூபா. 50—0—0.

சென்னை பாண்டியகுல க்ஷத்திரிய நாடார்கள் ஐக்கிய சங்கத்தின் செகிரிடெரியும், பிரபல வர்த்தக மிராசுதாருமான மிஸ்டர், ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார் வரவு ரூபா 50—0—0.

எல்லோரும் பார்க்கத்தக்கது.

அமரர் புராணம் என்னும் சான்றோர்குலதீபம் இப் புஸ்தகம் வேண்டுவோர்க் கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா. 2—8—0.

விலாசம்:—பூரணம் கொர்னேலியஸ்,
நாசரேத்தூர்
திருநெல்வேலிஜில்லா.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

**சுகமடையவும் உண்மையறியவும் கருதுங்கள்.**

## ஒரு முறை பரிக்ஷை பாருங்கள்.

### தந்தரோக நிவாரண சஞ்சீவிச் சூரணம்

பல்வலி பல்லரணை பல்லசைவுபல் தெரிப்பு பல்கூச்சம், ப
புழு ஈறுகரைதல் இரத்தம் வடிதல் வாய் நாற்றம், வாய்ப்புண் மு
லிய சகல தந்த ரோகங்களை உடனே நீக்கக்கூடிய, இந்த அருமை
யானபற்பொடி, நீண்ட கால ஆராய்ச்சியின்பேரில் பற்களுக்கு நன்மை
செய்யக்கூடிய சகல கடைச்சரக்கு மூலிகைகள், யாவுஞ் சேர்க்கப்பட்
அதனதன் முறைப்படியே பக்குவஞ் செய்து, அதனதன் அளவு
மிக கவனத்துடன், கல்நார் பஸ்பம் கடைச்சரக்கு மூலிகைகள் ய
முறைப்படி சேர்க்கப்பட்டு தயாராகஇருந்து உபயோகித்தயாவருக்கு
மிகுந்த திருப்தியைக் கொடுத்திருக்கிறது. இப்பொடியை ஒரு முறை
உபயோகித்தவர்கள் எவ்வித தந்த ரோகத்திற்கும் அஞ்ச வேண்டுவதி
ல்லை. சகலரும் உபயோகிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், மிகுந்
குறைந்தவிலைக்கு விற்கப்படுகிறது. வாங்கி உபயோகித்து மற்றவர்
களுக்கும் அடைந்த நன்மையைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

மூன்று மாதத்திற்கு வரக்கூடிய டப்பி 1-க்கு விலை ரூ. 0-6-0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஏஜண்டுகள் தேவை. விலாசம்,

அருமை நாயகம் நாடார்,
போட்டோகிராபர்,
மருந்து ஷாப், தூத்துக்குடி.

---

பெரிய கம்பெனி! சகாயவிலை!! நயமானசரக்குகள்!!!

திருப்தியில்லாத சரக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

எங்களிடம் காசியில் தயாராகும் பட்டு பீதாம்பர சேலைகள் து
பட்டாக்கள் ரவிக்கைகள் தாவணிகள் பஸ்காணுக்கள் முதலிய சக
பட்டு தினுசுகளும் மிகவும் சகாய விலைக்கு ஏராளமாகத் தயாரா
இருக்கின்றன.

வேண்டியவர்கள் எங்கள் "பட்டு பீதாம்பர கேட்லாக்" வ
வழைத்துப் பார்த்துக் கொள்ளவேண்டியது. உடனே எழுதுங்கள்.

விலாசம்:—

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

**SILK PITAMBER COY.,**
**BENARES CITY.**

---

Editor & Publisher S. A. Muthu Nadar "Nadarkula Mitran" Office Arruppukottah.
Printed at the Ravarathnam Press 34. Broadway Madra

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection